# கருணாநிதி அமைச்சரவை பதவி ஏற்றது; நெடுஞ்செழியன் இல்லை

Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு மாதம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

மலர் 11

இதழ்: 1

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 29 ஜுல்க: 23 செவ்வாய்க்கிழமை [11-2-69]

## விரைவில் மந்திரிசபை விஸ்தரிக்கப்படும்

சென்னை, பெப் 10

**தமிழக முதலமைச்சராக திரு. கருணாநிதி இன்று சத்திய பிரமாணம் செய்து பதவிஏற்றுக் கொண்டார் திரு. இரா நெடுஞ்செழியன் நீங்கலாக அமரர் அண்ணாதுரையின் மந்திரிசபையில் அங்கம் வகித்த மற்றைய மந்திரிகள் எல்லாரும் மந்திரிகளாகபதவி ஏற்றுக்கொண்டனர்.**

தமது மந்திரிசபையில் சேரும்படி திரு. இரா நெடுஞ்செழியனுடன் இன்று காலை 45 நிமிட நேரம் திரு. கருணாநிதி நடாத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. மந்திரிசபையில் சேர்ந்துகொள்ள முடியாதென நெடுஞ்செழியன் ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

திரு. இரா நெடுஞ்செழியன் வகித்து வந்த கல்வி அமைச்சு பொறுப்பு அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகவும், அவரது மனம் மாறும்வரை தாமே அந்தப்பொறுப்புக்களைக் கவனித்துக் கொள்ளப் போவதாகவும் திரு. கருணாநிதி அறிவித்தார்.

மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக் கிடையே நெருங்கிய உறவு ஏற்பட வேண்டுமென்பதையே தாமும் விரும்புவதாக பாரதப்பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தியிடம் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திரு. நெடுஞ்செழியனைத் தமது மந்திரிசபையில் அங்கம்வகிக்கும்படி தொடர்ந்து வற்புறுத்தப்போவதாகவும், இதுபற்றி நான்கு ஐந்து நாட்களில் இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி பதவி ஏற்றதும் தெரிவித்தார்

இப்போதுள்ள மந்திரி சபை தற்காலிக அமைப்பு என்றும், அமைச்சரவை விரைவில் விஸ்தரிக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

இன்று பிற்பகல் 3-45 மணிக்கு கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை ராஜ்பவனில் தமிழக கவர்னர் திரு. சர்தார் உஜ்ஜல் சிங் முன்னிலையில் பதவி ஏற்றது. நெடுஞ்செழியன் நீங்கலக அண்ணா மந்திரிசபையில் அங்கம்வகித்த பழைய மந்திரிகள் 7பேரும் பதவி ஏற்றனர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், ராஜ்யகீழ் சட்டசபை சபாநாயகர், சென்னை நகரமேயர், தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர். 20 நிமிடநேரம் பதவிப்பிரமாணவைபவம் நடைபெற்றது.



புதிய அமைச்சரவைபதவி ஏற்றதும் சென்னை மெரினா கடற்கரைக்குச்சென்று புதிய தமிழக முதல்வரும், அமைச்சர்களும் அண்ணாவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து தமிழக அமைச்சின் தலைமையகத்துக்குச் சென்றார்கள்.

அண்ணா கடைப்பிடித்த கொள்கைகளையே தாம் பின்பற்றி நடக்கப்போவதாகவும் தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்றிரவு திருப்பதி சென்றுவிட்டு சென்னையிலிருந்து டில்லி திரும்பிய பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியை திரு. கருணாநிதி சந்தித்துப் பேசினார். மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக்கிடையே நெருங்கிய உறவு தொடர்ந்து வலுப்படுவதையே தாமும் விரும்புவதாக திருமதி இந்திராவிடம் திரு. கருணாநிதி தெரிவித்தார். மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக்கிடையே நெருங்கிய உறவு ஏற்பட வேண்டுமென திருமதி இந்திரா கருணாநிதியிடம் கூறியபோதே திரு. கருணாநிதி மேற்கண்டவாறு அவரிடம் தெரிவித்தார். விமான நிலையத்துக்கும் சென்று திரு. கருணாநிதி திருமதி இந்திராவை வழி அனுப்பி வைத்தார்.

**திரு. கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள் இவர்கள் தான்: மதியழகன், கோவிந்தசாமி, முத்துச்சாமி, சாதிக் பாஷா, திருமதி சத்தியவாணிமுத்து, மாதவன்.**

# தேசீய அரசாங்கத்திலிருந்து ஒரு மந்திரி வெளியேற்றம்?

## சுங்க இலாகாஅதிகாரிகள் புகார் மீது பிரதமர் நடவடிக்கை

கொழும்பு, திங்க[illegible]

**தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையிலுள்ள அமைச்சர் ஒ வரை ராஜினுமாச் செய்யும்படி பிரதம மந்திரி தி டட்லி சேனநாயக்கா கோரியு[illegible]ளதாகத் தகவல் கிடைத்துள்ளது**

சமீபத்தில் வெளிநாட்டுக்குப் போய்விட்டு சென்ற வாரம் இங்கு திரும்பிய ஓர் அமைச்சரே இவ்விதம்கோரப்பட்டுள்ளாராம்.

வெளிநாட்டிலிருந்து திரும்பிய அமைச்சரும் அவரது மகனும் மகனின் மனைவியும் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்துசேர்ந்ததும், விமான நிலையத்தில் சுங்கப்பகுதியினர் குறிப்பிட்ட அமைச்சரை அரசாங்[...] செய்யவில்லையாம். அமைச்சர் விடப்பட்டதும், அவர் பின்னே வந்த அவரது மகனும், மகனின் மனைவியும் சுங்க இலாகாவின் சோதனைக்குட்படாமல் செல்[...] முயன்றனராம் ஆ[...] சுங்கப்பகுதி உயர் அதிகாரிகள் அவர்கள் இருவரையும் நிறுத்தி, கொண்டு வந்தபொருட்க[...] சோதனையிட்டனர்.

அ[...]ச்சர் குறுக்கிட்டு, [...]

இலாகா உயர் அதிகாரிகள் அதனை செவிமடுக்க மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து சுங்க இலாகாவினரால் இவர்கள் கொண்டுவந்த பொருட்களுக்கு ரூ. 1080 அபரா[...] விதிக்கப்பட்டது.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு இவ்விஷயம் [...]விக்கப்பட்டதாக[...] இலாகா உயர் அதிகாரி ஒருவர் இதுபற்றி பிரதமரைச் சந்தி[...]

சிங்களப் பரீட்சையில் சித்திபெறும் வரை

## டாக்டர்கள், தாதிகள், தற்காலிக ஊழியர்?

யாழ்ப்லாணம், செவ். சிஙகளப் பரீட்சைக்குத் தோற்றுததால் வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்ட ஆஸ்பத்திரி டாக்டர்கள், தாதிசள் பிரச்னைபற்றி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம். பி., சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவுடன் பேச்சுதார்த்தை நடத்தினர்.

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுததால் வேலை இழக்கவிருக்கும் சுகாதார இலாகா ஊழியர்களை சிங்களப் பரீட்சையில் சித்தியடையும்வரை தற்காலிக ஊழியர்களாக வைத்திருக்க சுகாதார அமைச்சர் சம்மதம் கொடுத்திருப்பதாக [...]

திரு. தா. சங்கரப்பிள்ளை நேற்றுத் தெரிவிததார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஒருவரும், பிரதம தாதி ஒருவரும் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுததால் அடுத்த மாதத்திலிருந்து சேவையை இழப்பதாக சுகாதார இலாகாவினுல் அறிவிக்கப்பட்டிடுப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுகாதார ஊழியரின் இந்த சிங்களப் பரீட்சைப்பிரச்னை பற்றி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பிரதமரையும் விரைவில் சந்தித்துப் பேச்சுவர்த்தை நடத்துவார் எனத் தெரிகின்றது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'மச்சானையும்ராஜலட்சுமியையும் [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுததால் வேலை இழக்கவிருக்கும் சுகாதார இலாகா ஊழியர்களை சிங்களப் பரீட்சையில் சித்தியடையும்வரை தற்காலிக ஊழியர்களாக வைத்திருக்க சுகாதார அமைச்சர் சம்மதம் கொடுத்திருப்பதாக தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் காரியதரிசியான

இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுகாதார ஊழியரின் இந்த சிங்களப் பரீட்சைப்பிரச்னை பற்றி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பிரதமரையும் விரைவில் சந்தித்துப் பேச்சுவர்த்தை நடத்துவார் எனத் தெரிகின்றது.

(கா. நி.)

ப்பட்டுள்ளாராம்.

வெளிநாட்டிலிருந்து திரும்பிய அமைச்சரும் அவரது மகனும் மகனின் மனைவியும் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்துசேர்ந்ததும், விமான நிலையத்தில் சுங்கப்பகுதியினர் குறிப்பிட்ட அமைச்சரை அரசாங்கத்தின் முக்கியஸ்தர் என்ற முறையில், பரிசோதனை

சுங்க இலாகாவின் சோதனைக்குட்படாமல் செல்ல முயன்றனராம் ஆனால் சுங்கப்பகுதி உயர் அதிகாரிகள் அவர்கள் இருவரையும் நிறுத்தி, கொண்டு வந்தபொருட்களை சோதனையிட்டனர்.

அமைச்சர் குறுக்கிட்டு, தம்முடன் வந்தவர்கள் எனத் தெரிவித்தும், சுங்க

இலாகாவினரால் இவர்கள் கொண்டுவந்த பொருட்களுக்கு ரூ. 1080 அபராதம் விதிக்கப்பட்டது.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு இவ்விஷயம் அறிவிக்கப்பட்டதாகவும், சுங்க இலாகா உயர் அதிகாரி ஒருவர் இதுபற்றி பிரதமரைச் சந்தித்துப் பேசியதாகவும் தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட அமைச்சர் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்த கைப்பையொன்றும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ராஜினுமாச் செய்யும் படி நேற்று பிரதமர் விடுத்த கோரிக்கை சம்பந்தமாக அமைச்சரிடமிருந்து இது வரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

கலந்துகொண்டனர். 20 நிமிடநேரம் பதவிப்பிர

சென்றுவிட்டு சென்னையிலிருந்து டில்லி திரும்பிய பார

---

## சரித்திரத்தில் பொன்னெழுத்து

கோப்பாய், திங்கள்

''தமிழ் மக்கள் மத்தியிலுள்ள சாதி வேறுபாடுகளை அகற்றி பழந்தமிழர் சமுதாயம் அடிப்படைக் கொள்கையுடன் மீண்டும் புத்துயிர் பெறச் செய்தவர் அறிஞர் அண்ணா. அவரது எழுத்தும், பேச்சும் பழையகலாச்சாரங்களிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ணுவதாக அமைந்தன.''

இவ்வாறு கோப்பாய் நாவலடி மைதானத்தில் நடைபெற்ற அமரர் அண்ணாவின் அனுதாபக் கூட்டத்தில் பேசுகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை கூறினார்.

செல்வன் கே. விநாயகஜோதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில், ''தற்காலத் தமிழ் மக்களிடையே அடிப்படை இலட்சியங்கள், மனிதாபிமானம், மனித சுதந்திரம் நிறைந்துவிளங்கிட, முன்னேற்றத்துடன் சுபீட்சமும். சமத்துவமும், மார்க்கமும் ஏற்பட சமுதாயச்சிற்பி அண்ணாவின் சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரவச் செய்தல்அவசியம்'' சன் என்றார்.

## பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் மற்றொருவருக்கும் 6 மாதச் சிறை

### அடித்து பல்லுடைத்ததாக தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

அடித்துப் பல்லுடைத்துப் படுகாயப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும், மற்றொருவருக்கும் தலா 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராஜா இத்தீர்ப்பை நேற்று வழங்கினார். பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் வேலு தங்கவேலு என்பவரைத் தாக்கி படுகாயப் படுத்தி, பல்லுடைத்ததாக சாவகச்சேரி பொலிஸ் நிலையததில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் தம்பிராசாமீதும் சின்னையா என்ற மற்றொருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வருடம் மே மாதம் நடந்த இந்தச் சம்பவதைத் தொடர்ந்துவிசாரணையின் பின்னர் கான்ஸ்டபிள் தம்பிராஜா தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டதோடு, கடந்த 19 நாட்களாக ரிமாண்டிலும் வைக்கப்பட்டிருந்தார்.

பொலிஸ் தரப்பில் புரக்டர் திரு. கந்தசாமியின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. எஸ். நாகராஜா வழக்கை நடத்தினர். எதிரிகள் தரப்பில் புரக்டர்கள் செல்லத்தம்பி, பாலகிருஷ்ணன், மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. ஜெயசிங்கம் ஆஜராகியிருந்தார்.

(கா. நி.)

## கொழும்பில் தமிழ் விழா

கொழும்பு, திங்கள்

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் தமிழ் விழாக் கொண்டாடுகின்றனர். பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் இம்மாதம் 12-ம் திகதி பிற்பகல் 5-30 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, திருமதி எம். தியாகராஜா, கவிஞர் காசி ஆனந்தன், திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் உரையாற்றுவர்.

வானொலிக் கலைஞர்கள் ரி. வி. பிச்சையப்பா (வயலின்) [illegible] இரத்தினம் (மிருதங்[illegible]) ரி. பி. ஜேசுதாசன் (பிடில்), கே. கே. அச்சுதன் (கடம்), இசை ப்ருந்தாவும், மீனாட்சி கல்யாணம் புகழ் கௌரி முத்துக்குமாரசாமியின் மாணவிகளின் நடனமும் விழாவில்இடம்பெறும். சிங்களக் கலைஞர்களும் விழாவில் பங்குபற்றுவர்.

## நூற்றாண்டு விழா

கோப்பாய், திங்கள்

மகாத்மா காந்தி நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டம் கோப்பாய் நாவலர் பாடசாலை மண்டபத்தில் தலைமையாசிரியர் திரு. எம். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுட்பட மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

## தமிழ்ப் பகுதிகளுக்கென ஒரு கல்வி டைரக்டர்

### கல்வி மசோதாவுக்கு திருத்த பிரேரணை வரும்

யாழ்ப்பாணம். செவ்.

ஆட்சிமன்றத்தில் கல்விப் புனரமைப்புச் சீர்திருத் மசோதா விவாதத்துக்கு எடுக்கப்படும்போது தமிழ் காங்கிரஸ் கட்சியினர் திருத்தப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவார்களெனத் தெரியவருகின்றது.

தமிழ்பேசும்மக்களுக்கென மட்டும் ஒருமேலதிக கல்வி டைரக்டரை நியமிக்கவேண்டுமென இவர்கள் தமது திருத்தப்பிரேரணையில்குறிப்பிடுவார்கள்.

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக இடம்பெறும் பிரச்னைகள், ஆசிரியர் இடமாற்றப் பிரச்னைகள், தமிழ்ப்பிரதேசங்களுக்கு விஞ்ஞானஆய்வுகூடங்கள் அமைப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகியவற்றை தனியான ஒருமேலதிக கல்விடைரக்டரை தமிழ்ப் பகுதிக்கென நியமிப்பதன் மூலம் தீர்க்கமுடியும் என இவர்கள் கருதுகின்றார்கள்.

தமிழ்க்காங்கிரஸார் கொண்டுவரவிருக்கும் அந்தத் திருத்தப் பிரேரணையை மற்றும் தமிழ் எம். பி.க்களும் ஆதரிப்பார்கள் என்று அவாகள் நம்புகின்றனர்.

(கா. நி.)

பம்பாயில்

## பொலிஸ் சுட்டது இருவர்மரண

புதுடில்லி, பெப். 10

பம்பாயில் இன்று காலை நடைபெற்ற ஒரு கலவரத்தில் பொலிஸ் சுட்டதில் மேலும் இருவர் மரணமடைந்தனர். ஆறுபேர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'சிவசேனு' கலகக்காரர் கற்களையும் போத்தல்களையும் வீசி ஆர்ப்பாட்டம் செய்தபோதே பொலிசார் சுட்டனர். முந்திய விபரம் 3 ம் பக்கத்தில்.

## தமிழரின் கல்வி வளர்ச்சியை திட்டமிட்டு தடைசெய்கிறார்

### கல்வி அமைச்சர் மீது திரு அமிர்தலிங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செவ்.

'தமிழினத்தின் கல்வி வளர்ச்சியை தடைசெய்ய பல வழிகளிலும் திட்டமிட்டு கல்விமந்திரி கருமமாற்றி வருகின்றார். கல்விமந்திரியால், தமிழரின்எதிர்காலம் இருள்சூழ ஆரம்பித்துவிட்டது. வடபகுதியில் படிப்படியாக பட்டதாரிஆசிரியர்களை குறைப்பதற்கு கல்வி மந்திரி நடவடிக்கை எடுத்து வருகிறார்.'

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நேற்று நடந்தஅகில இலங்கைப் பட்டதாரிகள் சங்கக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறினார்.

**பலதடவை போட்ட திட்டம்**

திரு. அமிர்தலிங்கம்மேலும் கூறியதாவது:-

65ம் ஆண்டு தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டபின்னர், பட்டதாரிகள் பிரச்னை பற்றி பல தடவை அரசாங்கத்திடம் வற்புறுத்தினேம். மந்திரி திருச்செல்வமும் பட்டதாரிகளுக்கு வேலைவழங்க ஒரு திட்டம் தீட்டினார். உள்ளூராட்சி சேவையில் வரும் காலி இடங்களுக்கு பட்டதாரிகள் நியமிக்க வேண்டும் என்பது அவரது திட்டம். ஆனல் இத்திட்டத்திற்கு தொழிற்சங்கங்களிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியதால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. உள்ளூராட்சி சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களைக் கொண்டே அந்தக் காலி இடங்கள் நிரப்பப்படவேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் கேட்டுக்கொண்டதால் திருச்செல்வத்தின் திட்டம் கைவிடப்பட்டது.

விஞ்ஞான பட்டதாரிகள் தென்னிலங்கையில் உள்ள சிங்கள பாடசாலையில் நியமனம்பெறுவதற்கு முயற்சித்தோம். தமிழ்விஞ்ஞானப் பட்டதாரிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிங்களத்தில் பயற்சியளித்து நியமனம் வழங்கும்படி கல்வி மந்திரியிடம் கோரினேம். அவர் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்ப் பட்டதாரிகள் தங்கள் சொந்த செலவிலேயே சிங்களம் படித்தபின் வந்தால் வேலைகொடுப்பதாக கல்வி மந்திரி சொன்னார். திறமைசாலிகளான தமிழ்ப்பட்டதாரிகளில் பலர் வெகு சீக்கிரத்தில் சிங்களத்தில் தேர்ச்சி பெற்றனர். மீண்டும் கல்வி மந்திரியிடம் சென்றுசிங்களத்தில்தேர்ச்சி பெற்ற தமிழ் விஞ்ஞான பட்டதாரிகள் இருப்பதாக கூறினேம். அவர்தட்டிக் கழித்துவிட்டார். கல்வி மந்திரியையும் மந்திரி திருச்செல்வத்தையும்கொண்ட ஒருகுழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின்கூட்டத்தில்கலந்து கொள்ளாது கல்வி மந்திரி தட்டிக் கழித்துவிட்டார். தமிழ் பட்டதாரிகளிடம் உண்மையில் கல்விமந்திரிக்கு அக்கறையிருந்தால் குழு ஏன்? கூட்டம் ஏன்? தென்னிலங்கைப் பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான காலி இடங்

(4-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'மச்சானையும்ராஜலட்சுமியையும் இரத்தினம்தான்சேர்த்துவைத்தார்

### நாவலர் சந்தி படுகொலை வழக்கில் குலசிங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

''எனது அண்ணன் சின்னமேளக்காரியான ராஜலட்சுமியை தனது ஆசைநாயகியாகவைத்திருந்தார். அண்ணன் இறந்தபின் எனது மச்சான் இராசையா, ராஜலட்சுமியுடன் தொடர்பு வைத்திருந்தார். எதிரியான இரத்தினம்தான் எனது மச்சானை ராஜலட்சுமியுடன் சேர்த்துவைத்தார்.

நாவலர் சந்தி படுகொலை வழக்கில் சாட்சியமளித்த கந்தையா குலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில்68-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதி காங்கேசன்துறை வீதியில் சுப்பிரமணியம் தெய்வேந்திரன் (18வயது) என்ற வாலிபரை துவக்கினால் சுட்டுக்கொலை செய்ததாக சீனு இரத்தினம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் ஜி. ஈ, சிற்றி கியூ. சி. அட்வகேட் ஜி. ஈ. சிற்றி (ஜூனியர்) அட்வகேட் எம். தேவசகாயம் ஆகியோரின் உதவியுடன், புறக்டர் ரி. வேலுப்பிள்ளை, புறக்டர், எஸ். யோகேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்கறிஞர் எஸ். சிவகுமார் எதிரிக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித்குணதிலாகா ஆஜரானர் விசாரணையைப்பார்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும்ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

குலசிங்கம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: நான் நான்கு வருடங்களுக்குமுன் திருமணம் செய்தேன். இராசையா என் சகோதரியை மணம் செய்தார். இத்திருமணம் சம்பவம் நடக்குமுன்னர் நடந்தது. ராஜலட்சுமியைத் தெரியும். என் அண்ணன் ராஜலட்சுமியை ஆஜநாயகியாகவைத்திருந்தார். சம்பவம் நடப்பதற்கு 6 மாதத்தின் முன் அண்ணன் இறந்துவிட்டார். என் அண்ணன் இறந்தபின், எனது மச்சான்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு வாரத்துக்குள் நவீன மார்க்கட் முயற்சி

### மேயருக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண நவீன மார்க்கட் கட்டட வேலைகளுக்கான புதிய கேள்விப்பத்திரங்கள் இன்றிலிருந்து 2 வார காலத்துக்குப் பின்னர் கோரப்படவிருக்கிறது. இதற்கான முழு அதிகாரத்தையும் யாழ்ப்பாணம் மாநகரசபை, நகர முதல்வருக்கு நேற்று வழங்கியது.

மார்க்கட் வேலை பற்றி ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று நேற்று மாலை 3 மணிக்கு சபைமண்டபத்தில், நகர முதல்வர் வழக்கறிஞர் எஸ். நாகராஜா தலைமையில் நடைபெற்றது.

மார்க்கட் கட்டட ஒப்பந்தம் சம்பந்தமாகவும், மாதிரிப்படத்தில் செய்யவேண்டிய திருததங்கள் பற்றியும் சுமார் ஒரு மணி நேரம் இங்கு ஆராயப்பட்டது. இறுதியில் பல அங்கத்தவர்களாலும் தெரிவிக்கப்பட்டபடி மேல் மாடியில் செய்யவேண்டிய திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் கட்டட வேலைக்கான கேள்விப்பத்திரம் கோரும் அதிகாரத்தை முதல்வருக்கு அளிக்கும் பிரேரணையை திரு. கே. வி. தெய்வேந்திரம் சபையில் பிரேரித்தார்.

நவீன மார்க்கட் மேல் மாடியில் குடியிருப்பு வசதி இல்லாமல், குளிர்ச்சாதன அறைகளும், சபைகள், கந்தோர் வசதிகளையும் கொண்டதாக அமைப்புப்படத்தில் திருத்தம் செய்து, கேள்விப்பத்திரங்களைக்கோரவேண்டுமென்றும், இதற்கான முழு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

க. பொ. த. (உயர்தர) கலை, விஞ்ஞான வகுப்புக்களில் சில இடங்கள் காலியாயுள்ளன. கல்லூரிக் காரியாலயத்தில் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்ப முடிவு திகதி மார்ச் 1-ம் திகதியாகும். புகுமுகப் பரீட்சை மார்ச் 10-ம் திகதி நடைபெறும். பரீட்சார்த்திகள் தங்கள் அடையாள அட்டைகளைக் கொண்டு வரல் வேண்டும்.

அதிபர்.

1186

**விற்பனைக்கு**

காதற் பறவைகள் (Love Birds) விற்பனைக்கு உண்டு. இடம்: 15, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

655


## தீர்மானங்கள்

சங்கானை, திங். பட்டினத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு பொதுமக்களுக்கேற்றவாறு கோலவரி வருவிப்பதென்றும் பட்டினசபைக் காரியாலயத்திற்கு நிரந்தரமான கட்டிடம் அமைப்பதற்கு தகுந்த இடத்தைத் தெரிவு செய்ய தலைவர் உபதலைவருக்கு அதிகாரமளிப்பதென்றும் ஏனைய பட்டினசபை, கிராமசபைகளைப் போல் வர்த்தகர்களையும் பொதுமக்களையும் பாதிக்காதவகையில் வியாபாரவரி வசூலிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 11 - 2 - 69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 வீணை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 யூனெஸ்கோ உரைச்சித்திரம், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்விருப்பம்.


இனுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30

சிவாஜி - ஜி. வரலெட்சுமி நடித்த

**நான் பெற்ற செல்வம்**

4-வது வாரம்!

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா, மற்றும் பலர் நடித்த

**ஒளி விளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) தினசரி 2-45, 6-45, 9-45.

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30, 9-30.

**ஜெய்சங்கர் — விஜயநிர்மலா**

மற்றும் பலர் நடித்த




அரியாலை "பொன்விழா" கிரிக்கெட்

# யங்லயன்ஸ் கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலை சுதேசிய திருநாட் "பொன்விழா"வையொட்டி பல விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் "மென்பந்து நொக்கவுட்" கிரிக்கெட் போட்டியில், யாழ்ப்பாணம் "யங்லயன்ஸ்" விளையாட்டுக் கழகமும், "ஐயனார் கோவிலடி" விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டதில் யங்லயன்ஸ் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஐயனார் கோவிலடிக் கோஷ்டி சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இக் கோஷ்டியின் காப்டன் ஜோகராசா 12 ஓட்டங்களையும், சிவபாலன் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

யங்லயன்ஸ் கோஷ்டியின் பந்தெறி வீரர்களாகிய எல். லூயிஸ் (காப்டன்) 5 விக்கெட்டுகளையும், பி. இம்மனுவேல் 5 விக்கெட்டுகளையும் அடுத்தடுத்து வீழ்த்தினர்.

யங்லயன்ஸ் கோஷ்டி துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததும், இக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரரான ஜீவராசா ஒரு ஓவரில் ஒன்றின்பின் ஒன்றாக 6 'பவுண்றியை' அடித்தார். இவர் ஆட்டம் இழக்கும் போது 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அடுத்து கே. சிவபாலன் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 31 ஓட்டங்களையும், பி. இம்மனுவேல் 14 ஓட்டங்களையும், பி. குணநாயகம் 12 ஓட்டங்களையும் எடுத்தனர். இக் கோஷ்டி 1-வது இன்னிங்ஸில் மொத்தம் 103 ஓட்டங்களையும் பெற்றது.

ஐயனார் கோவிலடிக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 37 ஓட்டங்களைப் பெற்றது.

யங்லயன்ஸ் கோஷ்டி வீரர், இம்மனுவேல், லூயிஸ் ஜீவராசா முறையே 4, 3, 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்ட முடிவில், யங்லயன்ஸ் கோஷ்டி எதிர்க் கோஷ்டியை இன்னிங்ஸாலும் 17 மேலதிக ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது. (தே. நி)

## இன்றைய பலன்

செவ்வாய்க்கிழமை

(11-2-69)

தை மாதம், 29 உ.

திதி- நவமி பகல் 11-46 மேல் தசமி.

நட்சத்திரம்- அனுஷம் பகல் 11-10 மேல் கேட்டை.

ராகுகாலம் - 3-34— 5-04.

சுபஹோரம்- 11-04—

# அண்ணா கண்ட கனவுகள்

உடுப்பிராய், திங்கள்

சமூக மறுமலர்ச்சியுடனும், விடுதலைபெற்ற சமுதாயமாகவும், சுதந்திரம் பெற்ற சமுதாயமாகவும் வாழவேண்டும் என்று கனவு கண்டவர் எமது அண்ணா. ஆன்னியர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்து சுதந்திரம் பெற்றும் தமிழர்கள் வாழும் நாடுகளில் தமிழர்கள் படும் கஷ்டங்களையும் தமிழ் மொழி நசுக்கப்படுவதையும் கண்டு கொதித்தெழுந்தவர் அண்ணாவே. பண்டைய கால சரித்திரங்களுக்கு ஒப்ப தமிழினம் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்று கருதியே தனது நாவன்மையாலும் எழுத்து திறனாலும் நாடகத்தையும் சினிமாவையும் பயன்படுத்தி பல நவீன யுக்திகளைக் கையாண்டு தமிழ்மக்களை விழிப்படையச் செய்தார்.,, உடுப்பிராய் கற்கவிநாயகர் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்ற அண்ணா இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வ. நடேசலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

### தமிழர் நாகரீகம் சீர்குலைந்திருக்கும்

'அறிஞரின் படிப்பாற்றலையும், புத்தகங்கள் எழுதும் ஆற்றலையும் கொண்டு பார்க்குமிடத்து அண்ணா நோ[illegible]பரிசினைக்கூட பெற்றிரு[illegible]கலாம். ஆனால் இவரது திறமைகள் பல வடிவங்களில் தமிழ் மக்களுக்குப் [illegible] கிட்டாதிருந்தால் தமிழ் மக்[illegible]ின் நிலையும், தமிழ்

### ஊர்காவற்றுறை ப. ச. அனுதாபம்

ஊர்காவற்றுறை, திங்கள்

'தமிழ்நாடு' முதலமைச்சரும், தமிழ்ப் பெருந் தலைவருமான அமரர் அண்ணா மறைவுகுறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை ஊர்காவற்றுறைப் பட்டின சபை நிறைவேற்றியது.

திரு. பி. இம்மனுவல் அனுதாபத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் உலகத் தமிழர் தலைவரான அண்ணா மறைவுதமிழ்பேசும் இனத்திற்கு பெரும் நட்டமாகும் எனக்குறிப்பிட்டார்.

0 0 0

### அண்ணாவுக்கு அஞ்சலி

சங்கானை திங்கள்

அறிஞர் அண்ணாவின் மறைவுக்கு கனகராயன்குள மகா வித்தியாலயத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

அதிபர் மு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அண்ணாவுக்கு இருநிமிடநேரமௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

0 0 0

### விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியவர்

கண்டி. திங்கள்

தமிழரின் உணர்ச்சிக்கும், தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும் தன்னையே ஈந்த பெருமகனும் அறிஞர் 'அண்ணா' அவர்களின் பிரிவு கேட்டு மிகமிக வருந்[illegible]ின்றோம்.

வாழ்க்கையின் அடித்தளத்திலே அமிழ்ந்து அல்லல் பட்டுக் கொண்டிருந்த எங்களுக்கு விழிப்புணர்ச்சி அளித்த அவ் வருந்தவப் [illegible]தல்

# நெடுந்தீவில் குதிரைப்பந்தயம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் சிறப்பாக இம்முறையும் சுதந்திரதின விழா கொண்டாடப்பட்டது. அதிகாலையில் நெடுந்தீவு காரியாதிகாரி அலுவலக முன்றலில் காரியாதிகாரி திரு. த. வேல்நம்பி கொடியேற்றி வைத்தார். கொண்டாட்டம் ஆரம்பித்து நாள்முழுவதும் பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 5 மைல் ஓட்டம்- குதிரைப் பந்தயம்- நீச்சல் போட்டியாகியன மிகவும் கவர்ச்சியாக இருந்தன.

மாலை நிகழ்ச்சிகளுக்குப்பின் பொதுக்கூட்டமும் இடம் பெற்றது. நெடுந்தீவு காரியாதிகாரி திரு. த. வேல் நம்பி தலைமையில் நடைபெற்றது. முக்கிய பேச்சாளர்களாக நெடுந்தீவு கிராமசபைத்தலைவர் திரு. அ. த. அம்பலமும் மாவித்தியாலய அதிபர் திரு. என். குருநாதனும் கலந்துகொண்டார்கள்.

திரு. அ. த அம்பலம்பேசும் போது திரு. அண்ணாதுரையின் அகாலமரணத்தால் எமக்கு ஒரு துக்கதினமும் கூட என்றும்தமிழன் குரலை உலகம் முழுவதிற்கும் எழுப்பிய இவர் இறந்தமைக்கு விரைவில் ஒரு அனுதாபக் கூட்டம் நடாத்தவிருப்பதாகவும் கூறினார்.

பரிசுகள் பெற்றோரின் விபரம்.

5மைல் ஓட்டம்:- தொ. மரயராசா (சென். யோன்) சு. மகாதேவா (சிவசத்தி) நீ. டேவிட் (உதய சூரியன்)

4 மைல் சயிக்கிள் ஓட்டம்:- சு. ஞானப்பிரகாசம் (சென். யோன்) இ. இராசப்பு (உதயசூரியன்) ந. பசுபதி (நடேசன்)

3 மைல் ஓட்டம்:- செ. யோகு, புவிராசசிங்கம் (சென். யோன்) அ. வின்ஸஸ்லாஸ் (உதயசூரியன்) செ. நீக்கிலாப்பிள்ளை.

நீச்சல் போட்டி:- ம. யாக்கோப்பு (உதயசூரியன்) அ. எமிலியானூஸ்பிள்ளை (உதயசூரியன்) இ. இராயப்பு (உதயசூரியன்)

குதிரை ஓட்டம்:- கு: கணேசலிங்கம் (ஸ்ரார்) நா. சு. வைத்திலிங்கம் (ஸ்ரார்விளையாட்டுக்கழகம்) வே. கீதபொன்கலன் (நடேசன்)

கயிறுழுத்தல் போட்டி:- உதயசூரியன் விளையாட்டுக் கழகம்,

முதியோர் ஓட்டம்;-எஸ். வலத்தீஸ். த. முருகேசு, த. பசுபதி.

பலூன் ஓட்டம்;-பொ. சுந்தரேஸ்வரன், யேதனிநாயகம், யே. தவ. நேசன்.

---

## யாருடைய பிரதிநிதி?

சென்னை, பெப். 10

"முதன்முதலாக டில்லி மேல்சபைக்கு அண்ணா சென்றபோது நீங்கள் யார் என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு அண்ணா, தெருவோரத்தில் வாழும் அன்றாடங்காய்ச்சிகளின் பிரதிநிதி என்று கூறினாரே தவிர லட்சக்கணக்கான தம்பிகளின் தலைவன் என்று கூறவில்லை. இந்தப் பண்பு இன்று எல்லோர் கண்களையும் குளமாக்கிக்கொண்டிருக்கிறது" இவ்வாறு சென்னை - வை. எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் நடைபெற்ற அண்ணா இரங்கற் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் திரு. கா. வேழவேந்தன் குறிப்பிட்டார்.

## வரவு-செலவுத் திட்டம் அங்கீகாரம்

உருத்திரபுரம், திங்கள்

கிளிநொச்சிக் கிராமசபை திரு. செல்லத்துரையின் தலைமையில் நடைபெற்ற போது வரவுசெலவுத் திட்டம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதுடன் சர்வகலாசாலையில் கல்வி பயிலுவதற்கு ஏழை மாணவர்களுக்கு இத்தொகுதியில் உபகாரச் சம்பளம் வழங்க ரூபா 500 ஒதுக்கப்படவேண்டுமென திரு. நா. கதிர்காமத்தம்பியால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## ஓய்வு பெறும் தலைமை ஆசிரியை

யாழ்ப்பாணம், செவ்.

ஆனைப்பந்தியடி சிறுவர் பாடசாலையில் கடந்த 25 ஆண்டுகாலமாக தலைமை ஆசிரியையாகப் பணிபுரிந்த திருமதி. ஜி. எம். செல்லத்துரை இம்மாத முடிவில் தமதுசேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். ஆனைப்பந்தியடியில் அன்னாரிடம் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் அவரது சேவையைக் கௌரவித்து ஓர் உபசார விழா நடத்தவிருக்கின்றனர்.

அண்ணாவின்

## சமாதிவேலை பூர்த்தியடைகிறது

சென்னை, பெப். 10

மறைந்த முதலமைச்சர் அண்ணாவை அடக்கம்செய்த இடத்தில் கட்டத் தொடங்கிய சமாதி பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. சமாதிவரை ரோடு போட்டு இருபக்கமும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. வேலியைச் சுற்றி செம்மண்ரோடு போட்டிருக்கிறார்கள். பெரிய மேடை கட்டி அதன் மத்தியில் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. நாற்புறங்கள் படிக்கட்டும், சமாதியின் நுழைவாயிலில் இரும்பு கேட்டும் போடப்பட்டிருக்கின்றது.

---


## 'உரிமை உணர்வு ஊட்டியவர்'

குரும்பசிட்டி, திங்கள்

"தமிழ் மக்கள் பல நூற்றாண்டு காலமாக உரிமையுடன் ஆளும் இனமாக வாழ்ந்துள்ளனர். அந்நியரால் அடிமைப்படுத்தப்பட்டபின் தமிழர் இரண்டாம்தரப் பிரஜைகளாக்கப்பட்டுள்ளனர். எந்தநாட்டிலும் இன்று பூரண உரிமையுடன் தமிழர் வாழவில்லை. பழம்பெருமை பேசும் நாம் இந்த நிலையிலிருந்து மாறி ஆளும் இனத்தவராக உரிமை பெற்றவர்களாக வாழவேண்டும் என்ற உணர்ச்சியை அறிஞர் அண்ணா ஊட்டியுள்ளார்" குப்பிளான் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற அறிஞர் அண்ணாவின் இரங்கற் கூட்டத்தில் பேசும்போது உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. வைரவநாதன் ஜே. பி. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. தர்மலிங்கம் எம். பி. மேலும் கூறியதாவது:

அறிஞர் அண்ணாவின் வழியைக் கடைப்பிடித்து தமிழுருக்கு விமோசனம் காண்பதே நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாகும். மொழி, இனப்பற்று மட்டுமின்றி தேசப்பற்று நிறைந்தவராக அண்ணா விளங்கினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரத்தில் சீனர் படையெடுப்பு நிகழ்ந்தபோது தேசிய ஒற்றுமை கருதி மத்திய அரசுடன் ஒத்துழைத்து தாய்நாடு பாதுகாக்கப்பட உழைத்தார். பல்வேறு காரணங்



# நீலகிரி எக்ஸ்பிரஸ்

(பாஸ்களும், சலுகைகளும் ரத்து)


வெலிங்டன் — யாழ்நகரில்

தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு

★மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.

★நடிகையர் திலகம் சாவித்திரி

★நம்பியார் ★நாகேஷ் ★ராகினி

நடித்த

கௌரி பிக்சர்ஸ் பரிசு

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S. S. வாசன் அவர்களால்

சுஸ்மன்கலரில் படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு கோலாகல காட்சியையும்



மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஒவ்வொரு தமிழனும் அவசியம் பார்க்கவேண்டிய படம்.

இங்ஸ்லி பிளாஸா மற்றும் சினிமாஸ் திரைகளில்

சிவாஜி—கே. ஆர். விஜயா

முத்துராமன்—நாகேஷ்—எல். விஜயலக்ஷ்மி

நடித்த

ஊட்டிவரை உறவு

(ஈஸ்ட்மன் கலர்)


பகல் 11-10 மேல் கேட்டை.

ராகுகாலம் - 3-34—5-04.

சுபநேரம் - 11-04—12-34.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு மகிழ்ச்சி நிரம்பியதாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும் சிலர் வாழ்க்கையில் புதுமனை புகும் சம்பவமும் ஏற்படலாம். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில் துறையில் நல்லமாற்றங்களுக்குஇடமுண்டு. உடல் நலத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும்.

மேஷம்- ஆயுதபயம் அவசரம்வேண்டும்.

ரிஷிபம்- துளிர்விடும் காதல் ஒளிவிடும் வாழ்வு.

மிதுனம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.

கடகம்- குரு விசுவாசம் கொள்கையில் முன்னேற்றம்.

சிம்மம்- செய்தொழில் விருத்தி சிறப்பும்உண்டு.

கன்னி- பொருள்வரவு சகோதர சுகம்.

துலாம்- நம்பிக் கெடுதல், நஷ்டமடைதல்.

விருச்சிகம்- இன்னலின் பின்னல் இதயபாரம்.

தனுசு- சொற் சிறப்பு சொகுசான வாழ்வு.

மகரம்- ஆசை வைக்காதே அவதிப்படாதே.

கும்பம்- அன்யினைன் ஆணை அமைதிக்கு வழி.

மீனம்- இன்பம் பொங்கும், இனசனமகிழ்ச்சி.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை


மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி

ஜெய்சங்கர், விஜயலட்சுமி
நடித்த

இரு வல்லவர்கள்

வின்ஸர்

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
நடித்த

குடியிருந்த கோயில்


நி...கலாம். ஆனால் இவரது திறமைகள் பல வடிவங்களில் தமிழ் மக்களுக்குப் பொதுத்தொண்டில் கிட்டாதிருந்தால் தமிழ் மக்களின் நிலையும், தமிழ் மொழியும் தமிழ்மக்களின் கலாச்சாரங்களும் சின்னாபின்னமாக சீர்குலைந்திருக்கும்' என்று திரு. ஆலாலசுந்தரம் தமது உரையில் தெரிவித்தார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் அண்ணாவின் ஆத்மா சாந்தி பெற இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

திருவாளர்கள் வை. தனேஷ்வரன், வ. நடேசலிங்கம், எஸ். கனகசபாபதி உட்பட பலர் உரையாற்றினர்.

## அனலைதீவில அஞ்சலி

அனலைதீவு, திங்கள்

தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாதுரையின் மறைவுக்கு அஞ்சலி செலுத்து முகமாக 5-ந் திகதி மாலை மத்திய சன சமூக நிலைய முன்றலில் கிராம சபைத் தலைவர் திரு. சு. நாகலிங்கம் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் கிராம சேவகர், வித்தியாலய அதிபர் ஆகியோர் அண்ணாவுக்கு புகழ் அஞ்சலி செலுத்தினர்.

றோம்.

வாழ்க்கையின் அடித்தளத்திலே அமிழ்ந்து அல்லல் பட்டுக் கொண்டிருந்த எங்களுக்கு விழிப்புணர்ச்சி அளித்த அவ் வருந்தவப் புதல்வனின் இறப்பு தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, உண்மையிலேயே எங்களுக்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் தமிழக மக்களுக்கும் அவரின் குடும்பத்தாருக்கும் எங்கள் மன்றத்தின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

என்னும் அனுதாபச் செய்தியை கண்டி மறுமலர்ச்சி மன்றம் தமிழக அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

0 0

## தமிழ்பேசவைத்த அண்ணா

அல்லைப்பிட்டி, திங்கள்

அறிஞர் அண்ணா மறைவு ஈழம் வாழ் தமிழ்மக்களுக்கு மாபெரும் இழப்பாகும். எம்மை எதிர் நோக்கும் எதிர்காலப் பிரச்னைகளுக்கு அண்ணா இருந்திருந்தால் உலக அரசியலில் உறுதுணையாக இருந்திருப்பார்.

இவ்வாறு நேற்றிரவு ஊர்காவற்றுறை சந்தைமைதானத்தில் நடைபெற்ற அண்ணா இரங்கல் கூட்டத்தில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. வ. நவரத்தினம் குறிப்பிட்டார். திரு. சி. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

தமிழ் மொழியின் உயர்வையும் திறமையையும் மேலும் மேலும் வளர்த்து உயர்த்தியபெருமை அண்ணாவைச்சாரும். தமிழன் தன்னைத் தமிழன் என்று துணிந்து சொல்லக்கூடிய உணர்வையும் ஆங்கில மொழி மோகத்தில் சிக்குண்டு கிடந்த பெரும் தமிழ்த் தலைகளைக்கூட துணிந்து தமிழ் பேசவைத்த பெருமையும் அண்ணாவுக்கு உண்டு. மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்தவர்கள் இனத்துக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நடத்தமுடியாதவர்கள் கட்சியின் இலட்சியத்துக்குக் கட்டுப்படாதவர்கள் அண்ணாவின் நாமத்தை உச்சரிப்பதைக் காண வேதனைப்படுகின்றேன்.

இக் கூட்டத்தில் தி. மு. க. கொழும்புக்கிளைச் செயலாளர் ஏ. இளஞ்செழியன் திரு. கம்பளைதாசன், இ. பானுதேவன், கவிஞர் இ. நாகராசன் ப. கதிரவேலு வணபிதா- ஸ்ரனில்லஸ் சி. குமாரலிங்கம் ஆகியோரும் பேசினர்.

கயிறிழுத்தல் போட்டி:- உதயசூரியன் விளையாட்டுக் கழகம்,

முதியோர் ஓட்டம்;-எஸ். வலத்தீஸ். த. முருகேசு, த.

யடியில் அண்ணாரிடம் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் அவரது சேவையைக் கௌரவித்து ஓர் உபசார விழா நடத்தவிருக்கின்றனர்.

## சிவராத்திரி விழா

உடுப்பிட்டி, திங்.

கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் ஆலய மகா சிவராத்திரி விழா எதிர் வரும் 15-ம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப் படவிருக்கின்றது. அன்றைய தினமிரவு விசேட பூசை, ஆராதனைகளும், புராணப் படிப்பு, திருமறை ஓதல், சமயப்பிரசங்கம் ஆகியனவும் இடம் பெறும்.

## நாடக அரங்கேற்றம்

உடுப்பிட்டி, திங்.

வடகருணை கலாமன்றத்தினரால் மகா சிவராத்திரியை முன்னிட்டு ''புகையிலைப் பூக்கள்'' என்னும் நாடகம் அரங்கேற்றப்படவிருக்கின்றது. விவசாயிகளின் வாழ்க்கையையும், தெய்வ பக்தியையும் இந் நாடகம் சித்தரிக்கின்றது.

ருந்த நேரத்தில் சீனர் படையெடுப்பு நிகழ்ந்த போது தேசிய ஒற்றுமை கருதி மத்திய அரசுடன் ஒத்துழைத்து தாய்நாடு பாதுகாக்கப்பட உழைத்தார். பல்வேறு காரணங் காரணங்களால் பிரிவுபட்டிருந்த தமிழரை ஒற்றுமைப் படுத்தி தமிழர் பண்பை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

கவிஞர் வீ. கந்தவனம், மயிலிட்டிக் கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி, பொ. நடனசிகாமணி ஆகியோரும் பேசினர்.

## ஏழாலையில்

ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலும் கிராமசபைத்தலைவர் திரு. க. சிவகுரு தலைமையில் தமிழக முதலமைச்சர் அண்ணாவின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

## மூன்று நாடகங்கள்

உடுப்பிட்டி, திங்.

மீசாலை வடக்கு வேம்பிராய் என்னுமிடத்தில் சிவராத்திரி விழாவிலன்று இரவு யார் குற்றவாளி, புது வாழ்வு, அரிச்சந்திரா மயான காண்டம் ஆகிய மூன்று நாடகங்கள் மேடையேற்றப் படுகின்றன.


கப்ஸ்டன் சிகரெட்டை வாங்குங்கள்




அவை நல்ல புகையிலைக் கலவை கொண்டவை

சிலோன் டொபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்களுக்கு தீவைப்பு: ரயில்நிலையம் கொளுத்தப்பட்டது

# பொலிஸ் சூட்டில் 7 பேர் பலியாகினர்

## பம்பாயில் சிவசேனை ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, பெப். 10

**பம்பாயில் நேற்று குழப்பம் செய்வதில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிசார் சுட்டதில ஏழுபேர் பலியாகினர்கள்; 35 பேர் காயமடைந்துள்ளனர்.**

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு ரயில்வே நிலயத்துக்கு தீ மூட்டினர். 20 பஸ்களை கொளுத்தினர்கள் பொலிசாருடன் கைகலப்பிலும் ஈடுபட்டார்கள். குழப்பங்களை அடக்க பொலிசார் 25 இடங்களில் 171 சுற்றுக்கள் சுட்டார்கள். இதில் 7 பேர் கொல்லயுண்டனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர். குறைந்தது ஆயிரம் பேராவது கைதுசெய்யப்பட்டிருப்பதாக பொலிசார் கூறினர். மத்திய-வடக்கு பம்பாயில் இந்தக் கலவரங்கள் இடம்பெற்றன.

உள்ளூர் சிவசேனை தலைவர் பால்தக்கரேயும் இரு சட்டசபை அங்கத்தவர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பாரத துணை பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய், பம்பாய்க்குவிஜயம் செய்தபொழுது ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடைபெறும் என்று திரு. தாக்கரே கொடுத்த வாக்குறுதி மீறப்பட்டிருப்பதாக பொலிசார் கூறினர்கள். திரு. தேசாய், பம்பாய்க்குவிஜயம் செய்தபொழுது ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள் பெரும் குழப்பமாக மாறியுள்ளது. கடந்தஇரவு எட்டு மணி தொடக்கம் ஊரடங்கு சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதுஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகும் கூட பரவலாக கலவர சம்பவங்கள் இடம்பெற்றன. ஆனல் பின்னர் நிலைமை கட்டுக்குள்ளிருப்பதாகப் பொலிசார் அறிவித்தனர்.

பம்பாயில் அமைதியும் சட்டஒழுங்கும் நிலைகுலைந்திருப்பது குறித்து மகாராஷ்டிரா முதலமைச்சர் பெரிதும் கவலை தெரிவித்துள்ளார். குழப்பங்களை கட்டுப்படுத்துவதற்கான கடும் நடவடிக்கைகள் எடுப்பதில் தமது அரசு பின்நிற்காது என்று அவர் கூறியுள்ளார்.

## பீகார் கலவரத்தில் நால்வர் கொலை

பீகாரில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்டகைகலப்புகளில் குறைந்தது நான்கு பேர் கொலையுண்டனர், சுமார் 100பேருக்கு காயம்ஏற்பட்டுள்ளது. இந்தக்கலவரங்களையொட்டி 12 ஓட்டுச் சாவடிகளில்வாக்குப்பதிவு ஒத்திப்போடப்பட்டது,

## 'ஹோப்' திரும்பியது

பம்பலப்பிட்டி, திங்கள்

கடந்த 10 மாதங்களாக கொழும்புத் துறைமுகத்தில் நின்ற அமெரிக்க வைத்தியக் கப்பலான 'ஹோப்' இன்று காலை இலங்கையை விட்டுப் புறப்படுகிறது. பல்வேறு வைத்திய சேவைகளில் இங்கு ஈடுபட்டிருந்த கப்பலை சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகாவும், அவரது அமைச்சு உத்தியோகத்தர்களும் கொழும்பு துறைமுகத்திற்கு சென்று அனுப்பி வைத்தனர்.

## நாவலர் ஒழுங்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சிறுவர் பாடசாலைக்கு அடுகாமையிலுள்ள ஒழுங்கைக்கு நாவலர் ஒழுங்கை எனப் பெயரிடப்பட்டு யாழ். மாநகரசபையினரால் பெயர்ப் பலகை நாட்டப்பட்டுள்ளது. ஆனைப்பந்தி இந்து வாலிபர் சங்கம் அதன் தலைவர் திரு. ஏ. எஸ். தியாகராஜா தலைமையில் கூடி இவ்வொழுங்கைக்கு நாவலர் ஒழுங்கை எனப் பெயரிடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து வட்டார அங்கத்தவரான திரு.

## 'அரசாங்கத்தில்செல்வாக்கு பெற்றிருப்பவர்கள்யார்?''

### உபசபாநாயகர் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

''தேசிய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவர ஒத்துழைப்பு வழங்கிய தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சியிலும் பார்க்க, குளியாப்பிட்டியிலுள்ள ஒரு வர்த்தகருக்கும், கொழும்பிலுள்ள ஒரு வர்த்தகருக்கும் அரசாங்கத்திடம் அதிக செல்வாக்கு இருக்கிறது. தமிழ் எம். பி. க்களால் செய்ய முடியாத காரியத்தை இவர்கள் இலகுவில் செய்துவிடுகின்றனர். கல்விப் பகுதியிலும், இலங்கை போக்குவரத்து சபையிலும் இவ்விருவர்த்தகர்களும், ஏராளமானேருக்கு பின்கதவால், வேலை வழங்க உதவிசெய்திருக்கிறர்கள். இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால், தமிழ் எம். பி. க்கள் எந்தக்காரியத்தைத் தான் செய்யமுடியும்''

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடந்த அகில இலங்கை வேலையற்றபட்டதாரிகள் சங்க கூட்டத்தில் பேசிய உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சதானந்தன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. எம். சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

கல்வி மந்திரியாக இரிய கொல்லை இருக்கும்வரை தமிழ் பட்டதாரிகள் சிங்களத்தில் பாண்டித்தியம் பெற்றுலும், வேலை கிடைக்காது. வடபகுதியில் உள்ள பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு சீட்டுக் கழி[illegible]வரும்இரியகொல்லை, புதி[illegible] பட்டதாரிகளுக்கு ஆசிரியர் வேலைவழங்குவார் என்று எ[illegible] எதிர்பார்க்க முடியும்.

### எதிர்க்கவில்லை

வரை அவர்களுக்கு வேலை வழங்கப்படவில்லை. உங்கள் பிரச்னைகளை பல தடவை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தோம். ஆனல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. தனிப்பட்டவர்த்தகர்களுக்குள்ள செல்வாக்கு தமிழ் எம். பி. க்களுக்கு இல்லையென்பதை வேதனையுடன் கூறுகிறேன்.

## வீதி திருந்தியது

அனலைதீவு, திங்.

பல காலமாக திருத்தப்படாமலிருந்த அனலைதீவு ஆஸ்பத்திரி வீதி, கிராம சபைத் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனல் ற் பொது மராமத்துப் பகுதியினரால் நல்ல முறையில் திருத்தியமைக்கப் பட்டுள்ளது.

## வேலையற்ற பட்டதாரிகள் நெசவாலை நிறுவுவர்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியில் ஒரு மின்தறி ஆலையை நிறுவ அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள்சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இதற்காக ஓர் உப குழு தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆலைக்கான கட்டட வேலைகள் ஏப்ரல் மாதம் ஆரம்பமாகுமென்றும், வடபகுதியில் மட்டுமன்றி நாட்டின் மற்றப்பகுதிகளிலுள்ள செல்வந்தர்களிடம் நிதி திரட்டவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

மின்தறி நிறுவும் யோசனையைத் தெரிவித்த ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் இதற்கான நிதியைப் பல செல்வந்தர்களிடமிருந்து பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்திருக்கிறர்.

இந்த ஆலையில் வருடாவருடம் 100 பட்டதாரிகளுக்குத் தற்காலிக வேலை வழங்க முடியுமென்றும், அவர்கள் வேறு வேலை பெற்றுச் சென்றபின் அந்த இடங்கள் புதிய பட்டதாரிகளால் நிரப்பப்படுமென்றும் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

### ஜி. ஜி. வாக்குறுதி

இந்நாட்டில் உள்ள தனிப்பட்ட வர்த்தக ஸ்தாபனங்களில் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு வேலைபெற்றுத் தருவதாக யாழ்ப்பாண எம்.பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று பட்டதாரிகளுக்கு வாக்குறுதியளித்தார்.

விஞ்ஞானப் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியலைத் தமக்குத் தருமாறும் அவர் பட்டதாரிகளிடம் கேட்டுள்ளார்.

பட்டதாரிகள் சங்கத் தூதுகோஷ்டியொன்றை இம்மாத இறுதியில் பிரதமரிடம் அழைத்துச் சென்று அவர்களின் பிரச்னையைப் பிரதமருக்கு நேரடியாக எடுத்துக்கூறி தீர்வுகாணப் போவதாகவும் திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

கல்விப் பகுதியில் பட்டதாரிகளுக்கு வேலைபெற்றுத் தருவது மிகவும் கஷ்டமென்றும், கல்வி மந்திரிக்கும், தனக்கும் ஒத்துவராதென்றும் அவர் கூறினர்.

## சிரமதானத் தொண்டர்கள் செல்கின்றனர்

சங்கானை, திங்கள்

சங்கானை இந்து வாலிபா சங்க சிரமதானத் தொண்டர்கள் மகா சிவராத்திரி மகோற்சவ தினத்தை முன்னிட்டு இம்மாதம் 13ந் தேதி திருக்கேதீஸ்வரம் செல்கின்றனர். இக்கோஷ்டிக்குத் திரு. க. பொன்னம்பலம்[illegible]தலைமைதாங்குவார்.

## பிரசவ விடுதிக்கு கோரிக்கை

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் பாணுவெட்டி அரசினர் வைத்தியசாலையில் ஒரு பிரசவ விடுதியை உடன் திறந்து உதவுமாறு தொல்புரம், சுழிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஓர் மகஜர் மூலம் வேண்டியுள்ளனர்.

மகஜரின் பிரதிகள் சுகாதார அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில் ஐந்து மைல் சுற்றளவில் வாழும் மக்களின் அவசிய தேவையைச் சுட்டிக் காண்பித்துள்ளதுடன் நூற்றுக்கு என்பது வீதமான ஏழை மக்கள் வாழும் பகுதி இது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலைகளுக்கு பதில் மணல் மூடை

சுன்னுகம், திங்கள்

மயிலிட்டியைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் வலைகள் திருட்டுப் போய் விட்டனவாம். சுமார் 15,000 ரூபா பெறுமதியான இந்த வலைகளிலிருந்த இடத்தில் மணல் மூடைகள் காணப்பட்டனவாம்.

இப்பகுதியில் மீன்பிடி வலைகள் திருட்டுப்போவது சகஜமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பொழுது !

தரோமோ

வியாபார உத்தரவாத அடையாளம்

உரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீகாரில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்டகைகலப்புகளில் குறைந்தது நான்கு பேர் கொலையுண்டனர், சுமார் 100பேருக்கு காயம்ஏற்பட்டுள்ளது. இந்தக்கலவரங்களையொட்டி 12 ஓட்டுச் சாவடிகளில்வாக்குப்பதிவு ஒத்திப்போடப்பட்டது,

# வேட்பாளர்படுகொலை

உத்தரபிரதேசத்தில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். கைராஞ என்ற தொகுதியில் இந்த வேட்பாளர் போட்டியிட்டார். கடந்த 5-ம் திகதி அங்கு வாக்குப்பதிவு செய்யப்பட்டது. ஒரு கைகலப்பின் போது இந்த வேட்பாளர் கொல்லப்பட்டார். கைகலப்பில் துப்பாக்கிகள் பெருமளவில் பாவிக்கப்பட்டதாம். இதில் காயமடைந்தமேலும் ஐவர் கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர்.

## மிகப்பெரிய தகவல் கிரகம்

வாஷிங்டன், பெப். 10

உலகின் மிகப்பெரிய தகவல் கிரகமொன்றை அமெரிக்கா நேற்று விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. 1700 ருத்தல் பாரமுள்ள இந்தக்கிரகம் கடல்களிலுள்ள கப்பல் தளங்களோளோடும், ஆகாயவிமானங்களோடும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளும். ராணுவத் தொடர்புகளுக்கு இந்தக் கிரகம் மிகவும் பயன்படுமாம்.

---

## காமராஜர் இந்திரா சந்திப்பு

புதுடில்லி, பெப். 10

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரை இன்று திருப்பதியில் சந்தித்துப் பேசினர். பொது விஷயங்கள் பற்றி தாங்கள் பேசியதாகக் கூறிய திருமதி இந்திராகாந்தி, காமராஜருக்கு மத்திய அரசாங்கத்தில் மந்திரிப்பதவிக் கொடுப்பது பற்றிப் பேசவில்லை என்று நிருபர்களிடம் கூறினர்.

திரு. காமராஜர் நிருபர்களிடம் மேலும் தகவல்களைக் கொடுக்க மறுப்புத் தெரிவித்தார்.

---

எந்தநேரத்திலும்

## நாஸரைசந்திக்க எஸ்கோல்தயார்

டெல்அவிவ், பெப். 10

எகிப்திய ஜனதிபதி அப்துல் நாஸரை எந்த இடத்திலும்எந்தச்சந்தித்துப்பேசுவதற்கு தாம் தயாராக இருப்பதாக இஸ்ரேல் பிரதம மந்திரி திரு. எஸ்கோல் அறிவித்துள்ளார். ஆனல் சிரியாவில் தமது ராணுவம் கைப்பற்றிய இடங்களைவிட்டுக்கொடுக்க அவர் கண்டிப்பாகமறுத்துள்ளார்.

## விண்வெளி செலவு குறையும்

வாஷிங்டன், பெப். 10

அமெரிக்க நிதி நிலமை மோசமாக விருப்பதால் அமெரிக்க வானவெளிப் பிரயாணத்தை குறைப்பது எப்படி என்பது பற்றி அமெரிக்க ஜனதிபதி திரு. நிக்சன் ஆலோசித்து வருகிருர். இதுபற்றி ஆராய பல்வேறு விஞ்ஞானிகளைக் கொண்ட சபை ஒன்றையும் அவர் அமைக்க விருக்கிருர்.

அமெரிக்க நிதி நிலமை மோசமாயிருந்து வருதால் அமெரிக்க வானவெளிப் பிரயாணத்திற்கு ஏற்படும் செலவுகளைக் குறைக்க வேண்டுமென அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். 'அப்பல்லோ' திட்டம் திட்டமிட்டபடி ஜூலையில் நடைபெறு மென்றும், அப்போது சந்திரனில் மனிதனை அமெரிக்கா இறக்கு மென்றும் திரு. நிக்சன் மேலும் தெரிவித்தார்.

---

## வீதியின் அவலநிலை

அல்லைப்பிட்டி, திங்.

வேலணை புங்குடுதீவு பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் வேலணை அம்மன் கோவில் வீதி பல ஆண்டுகளாக திருத்தப்படாத நிலையில் உள்ளது, அத்துடன் இவ்வீதியிலுள்ள மதவும் இடிந்த நிலையில் காட்சி அளிக்கின்றது. இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் பொது வேலைப்பகுதியினருடன் தொடர்பு கொண்டதின் பயனக மேற்படி மதகை மூடி ஓர் இரும்புத் தகரம் மட்டுமே போடப்பட்டுள்ளது. இதனல்பொது மக்களும் வாகனச் சொந்தக்காரர்களும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

யில் கூடி இவ்வொழுங்கைக்கு நாவலர் ஒழுங்கை எனப் பெயரிடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து வட்டார அங்கத்தவரான திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் முயற்சியினல் இது நிறைவேற்றப்பட்டது. (தே. நி)

---

## சரவணை மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை, திங்கள்

ஆறு சதுரமைல்களைக் கொண்டதும், ஆயிரம் மக்கள் வாழும் கிராமமுமாகிய சரவணைக் கிராமத்திற்குத் தனியான கிராமசபை ஒன்று அமைத்துத்தரவேண்டுமெனச் சரவணைப் பொது மக்கள் அமைச்சர் திரு. பிரேமதாசாவிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சரவணை மக்களின் கோரிக்கையை தாம் கவனத்திற்கு எடுப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

## வாஞெலிக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்,

''தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணுவின் மறைவுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒரு நிமிடம்கூட அஞ்சலி செலுத்தாதது இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களை அவமதித்த செயலாக மட்டுமல்லாது இலங்கைக்கே பெரும் வெட்கக்கேடான செயலுமாகும்.''

நல்லூர் வடக்கு சனசமூக நிலையக்கூட்டத்தில் அமரர் அண்ணுவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டபோது உரைநிகழ்த்திய சங்கச் செயலாளரான திரு. ச. இ. தம்பிராசா இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தலைவர் திரு. கே. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அண்ணுவின் மறைவுக்காக இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலாளர் திரு. தம்பிராசா மேலும் பேசுகையில், முதலமைச்சரின் மறைவு தமிழ்நாட்டுக்கு மட்டுமன்றி உலகத் தமிழ் மக்களுக்குமே ஓர் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும் என்ருர்.

சங்கத்தின் ஆண்டு விழாவை அடுத்த சித்திரை மாதத்தில் நடாத்துவதெனவும்கூட்டத்தில்முடிவு செய்யப்பட்டது. இன்னும் பலர் அண்ணுவின் பெருமை பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள் (கா. நி.)

புதிய பட்டதாரிகளுக்கு ஆசிரியர் வேலைவழங்குவார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்.

### எதிர்க்கவில்லை

இ[...]ள்ள அரசியல் சூழ்நிலையில், உத்தியோகத்திற்காக தமிழர்கள்சிங்களம் படிப்பதை எந்தத் தமிழ் கட்சியும் எதிர்க்கவில்லை. ஆனல் சிங்களம் படித்துவிட்டால், வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற 25 தமிழ் விஞ்ஞானப்பட்டதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சை நடந்தது. இவர்களில் இருவர் மட்டும்தான் நியமிக்கப்பட்டார்கள்.

### கல்வி அமைச்சர் போக்கு

தென்னிலங்கையில் நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் விஞ்ஞானம் போதிக்க பட்டதாரிகள் தேவை இருந்தும், தமிழர் என்றகாரணத்தால் கல்வி மந்திரி தட்டிக் கழித்துவிட்டார். இது பற்றிநான் கல்வி மந்திரியை நேரில் சந்தித்துக்கேட்டேன். அப்போது அவர் என்ன சொன்னர் தெரியுமா? தமிழ் எம். பி. க்கள் எவ்வளவு மோசமாகத் தன்னைத் திட்டுகிருர்களோ, அதனல் தனக்கு லாபமென்றும், தென்னிலங்கையில் அதனல் தனக்கு ஆதரவு கூடுவதாகவும் தெரிவித்தார். அவர் தேர்தலில் கண்ணுயிருக்கிருரே தவிர நாட்டின் வருங்காலச் சந்ததியினரைப்பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

### ஒப்புக்கொள்கின்றேன்

பட்டதாரிகள் விஷயத்தில் நாங்கள் இதுவரை எடுத்து வந்த முயற்சிகள் எல்லாம் படுதோல்வியில் என்பதை பகிரங்கமாகவே ஒப்புக் கொள்கின்றேன்.

தமிழரின் உரிமைகள் பற்றிய விஷயமாக அடுத்த வாரம் தமிழ்க்காங்கிரஸ் பிரதமரை சந்திக்கவிருக்கிறது. அப்பொழுது பட்டதாரிகளின் பிரச்னைகளுக்கு முடிவுகாண முயற்சிப்போம்.

இதற்கு முந்தின ஆட்சியில் கூட, அப்பொழுது இருந்த கல்வி மந்திரி பட்டதாரிகள் விஷயத்தில் அக்கறை காட்டவில்லை. இரு தடவை 50 பட்டதாரிகளை தெரிவுசெய்து அவர்களுக்கு சிங்களபயிற்சியளித்து நியமனம் வழங்கினர்கள். மூன்ருவது தடவை 25 பட்டதாரிகளை தெரிவுசெய்து சிங்களத்தில் பயிற்சியளித்து வந்தார்கள். ஆனல் இன்று


உரம்

112 இரு. பைகளில் கிடைக்கிறது





கீழ்க்காணும பயிர்களுக்கு உகந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| கீரை வகைகள் | கிழங்குப் பயிர்கள் | வாழை | அந்தூரியம் | தென்னை |
| தாழ்ந்த பூமிக் | உருளைக் கிழங்கு | அன்னுசி | பெக்கோனியா | கோப்பி |
| காய்கறிகள், | வெங்காயம் | பொதுப் பூவினங்கள் | புல் முற்றம் | கொக்கோ |
| பயறு, அவரை | பழ மரங்கள் | ரோஜா பூவினங்கள் | வெற்றிலை | நெல் |
| வகைகள் | நாரத்தை வகைகள் | | புகையிலை | விசேஷ நெற்கலவை |
| மிளகாய், தக்காளி | | | விசேஷ சிகரெட் | |
| | | | புகையிலை | |

இலங்கை முழுதுமுள்ள ஷெல் ரசாயனப் பொருட்கையிருப்பாளர் எல்லோரிடமும் 112 இரு. பைகளிலும் 5 இரு. பைகளிலும் விற்பனையாகின்றன.

QUALITY GUARANTEED SHELL BY SHELL SCIENCE

குரோமோ உரம் உபயோகித்து

GRO-MORE அதிக உணவு பயிரிடுக.


## பண்டத்தரிப்பு ப.ச.தீர்மானங்கள்

சங்கானை, திங்கள்

பண்டத்தரிப்புப் பட்டின சபையின் முதலாவது மாதாந்தக்கூட்டம் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்

AGENTS

ரோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் அனைவரும் ஒரே இறைவனை வழிபடுகிறோம். பல பெயர்களைச் சொல்லி வழிபடுகிறோம். ஆதலால் நமது அடிப்படை ஒற்றுமையை உணர்ந்து தீண்டாமையையும், மனிதர்களிடையே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மனப்பான்மையையும் அகற்றவேண்டும்.

—மகாத்மாகாந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 29-ந் திகதி
(11 - 2 - 69)

## வணக்கம்: நன்றி

இன்றுடன் 'ஈழநாடு' பத்திரிகைக்குப் பத்தாண்டுகள் நிறைந்து பதினோராவது வயது பிறக்கின்றது. மகிழ்ச்சியான இச் சமயத்திலேயே இதுவரை தன்னை ஆதரித்து வளர்த்து வந்துள்ள அன்பர்கள் அனைவருக்கும் தனது உளம் கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் 'ஈழநாடு' தெரிவித்துக்கொள்ளுகின்றது.

ஈழத் தமிழரின் ராஜதானி என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்த வேண்டுமென்று பல பெரியோர்கள் நீண்ட காலமாக ஆவல் கொண்டிருந்தனர். அந்த ஆவலை நிறைவேற்றிவைக்கும் துணிச்சலும் பாக்கியமும் திரு. க. சி. தங்கராசா அவர்களுக்கும் அவர் சகோதரர் அமரர் டாக்டர் சண்முகரத்தினத்துக்குமே கிடைத்தது. இப்பத்திரிகையின் ஸ்தாபகர்களான அப்பெருந்தகைகளுக்கு எங்களது மட்டுமன்றி ஈழத் தமிழரின் நன்றியும் உரித்தாகும்.

பத்தாண்டுகளுக்குமுன் 'ஈழநாடு' வாரப்பதிப்பாக வெளிவந்தபோது, இதுநீடித்துப் பிழைக்குமா என்று பொதுவாகப் பலருக்கும் கவலையும் சந்தேகமுமிருந்தது. பல போட்டிகளையும் இன்னல்களையும் சமாளிக்கவேண்டியது ஒருபுறமிருக்க, தலைநகரான கொழும்புக்கு வெளியே பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தப் போதிய வசதிகள் கிடையா. என்றாலும் மறு வருடமே வாரம் இருமுறையாகவும் பின்னர் தினசரியாகவும் மலர்ந்து பத்தாண்டு 'ஈழநாடு' விருப்பு வெறுப்பின்றி நடுக்கண்ட நீதியுடன் மக்களின் மதிப்பையும் அபிமானத்தையும்பெற்றுவரமுடிவதாயின், அது இறை அருளாலேயே என்பதில் எமக்கு ஐயமில்லை. இதே துணையால் நாடுகளுக்கும் புதிய நல்லுறவும் ஒத்துழைப்பும் நன்மையும் ஏற்படவும் முடியும். அதற்கான நல்ல சகுனங்களை இப்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்தியாவுக்கும் சீனத்துக்கும் எல்லைச் சண்டைஏற்பட்டு இப்பகுதியில் அமைதிக்கு ஆபத்து ஏற்படுமோவென்று பலரும் அஞ்சக்கூடியதாக இருந்தபோது, நமது இலங்கை தலையிட்டு அந்த ஆபத்தை எப்படித் தவிர்க்க முடிந்ததென்பது சரித்திரத்தில் பதியத்தக்க காரியம். சர்வதேச அரங்கிலே வியட்னும், மேற்கு ஆசியாமுதலிய நாடுகளில் சண்டைகள் மூண்டு பெரும் நாசங்களை விளைவித்து, இன்னும் அவை புகைந்து வரினும், சமாதானப் பேச்சுவார்த்தைகளால் இவற்றைத் தீர்ப்பதற்கான நன்முயற்சிகள் நடைபெறுகின்றன. இவற்றிலும் இலங்கைக்குப் பங்குள்ளது.

உருவிலே இலங்கை சிறியதாயினும், இதன்கீர்த்திபெரிதென்றும், பல வெளிநாடுகளும் தங்கள் ஸ்தானிகர்களை இங்கு அனுப்பி நமதுநல்லுறவைப் பெற ஆவல் கொண்டுள்ளதாகவும் உலக சமாதானத்தையும், சுபீட்சத்தையும் வலுப்படுத்துவதில் உதவநமக்கு ஐக்கியநாடுகள் சபையில் இடம் கிடைத்திருப்பதாகவும் உலகின் கண்களும் காதுகளும் இலங்கையில் நடப்பதை கவனித்து வருவதாயும்இங்கு உள்நாட்டிலும், மக்கள் மனதிலும்அமைதியும் நல்லெண்ணமும் நிலவினுல்தான், உலக அமைதிக்கும் நல்லுறவுக்கும் நாம் நமது பங்கை நிறைவேற்றமுடியுமென்றும் குறிப்பிட்டு, இதற்கான வகையிலே இலங்கையில் ஒற்றுமையும், சமூக நல்லுறவும் நிலவச்செய்வதே, 'ஈழநாடு' பத்திரிகையின் முயற்சியாகவும் நோக்கமாகவும் இருக்குமென்று பத்தாண்டுகளுக்குமுன் முதல் இதழிலே குறிப்பிட்டிருந்தோம்.

## வாழ்ந்திடுக பல்லாண்டு

திருமலியும் யாழ்ப்பாணம் செய்ததவப் பயனுகித் திகழ்ந்து நின்ற
தலைசிறந்த புகழாளன் தங்கராஜன் என்னும் தகுதியோனும்
கலையுயர்ந்த இரத்தினமாம் சண்முகரெத் தினமென்னும் கலைவல் லோனும்
நிலையுயர்ந்து நிற்கவென நியமித்த அச்சகமாய் நிலவி நின்றே,

கற்றவர்கள் புகலிடமாய்க் கலாநிலையப் பதிப்பகமாய்க் கண்டோர் போற்ற
மற்றவர்கள் என்னுது யாவரையும் வரவேற்று மலர்ச்சி கொண்டு
உற்றபணி நாலாண்டு செயும் வண்ணம் எமக்களித்து உயர்ந்த கோயில்
பெற்றதொரு அருங்குழவி ஈழநாடெனும் பெயரைப் பெற்றதன்றே.

அன்னதொரு வாரஇதழ் நாளிதழாய்த் தலைசிறந்து ஆண்டுபத்து
பொன்னனைய சேவை செய்து புகழோச்சி யாழ். நகரில் பொலிந்த தாமால்
கன்னலெனப் பாகுஎனக் கருத்தினையே தீட்டிடுவோர் உழைப்போர் யாரும்
மன்னுகவே நிலமிசையே வாழ்ந்திடுக பல்லாண்டு ஈழநாடு.

— வில்பிரட்.

# தனக்கென தனிஇடம் பெற்ற 'ஈழநாடு'

''அரசாங்கமில்லா ஒரு நாட்டை நான் விரும்பினுலும் சுதந்திரமாகப் பிரசுரிக்கப்படாத புதினப் பத்திரிகைகள் இல்லாத நாட்டை நான் வெறுக்கின்றேன்'' என்று அமெரிக்க ஜனுதிபதியாகவிருந்த உவில்ரோ உவில்சன் கூறினுர். மேற்கூறிய வார்த்தைகள் எவரின் குறுக்கீடின்றி பத்திரிகைச் சுதந்திரம் பற்றியும் பத்திரிகைகள் ஒரு நாட்டுக்கு எவ்வளவு முக்கியமாகத் திகழ்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. உலக விடயங்களை அறிய உதவும் சாதனங்களில் பத்திரிகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றதெனலாம். எத்தனையோ படிப்பறிவற்ற மக்கள் பத்திரிகைகள் வாயிலாக உலகம் போற்றும் உத்தமர்களாக வளர்ந்தார்களென்பதை அறிய முடிகிறது. பாமரரை பண்டிதனுக்கும் பணியில் பத்திரிகைகள் ஈடுபட்டிருக்கின்றன. அறிவு விருத்திக்கு அவை யாற்றும் பணி உன்னதமானதெனலாம். இளம் உள்ளங்களில் பத்திரிகைகள் விஷக் கருத்துக்களைப் புகட்டுவதால்நாட்டுக்கு தீங்குஏற்படும் என்பது ஆன்ரோர்களினது ஆழ்ந்தகருத்து. எனவே முக்கிய பணியை மேற்கொண்டிருக்கும் பத்திரிகைகள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைக் கள்ளங்கபடமற்ற அப்பாவி மக்கள் நம்பிவிடுகின்றார்கள்.

...வது வயது பூர்த்தியுறும் 'ஈழநாட்'டை நினைக்கும்தோறும் தமிழ் மக்களாகிய நாம் பெருமைப்பட வேண்டும். 'ஈழநாடு' கடந்த காலத்தில் செய்த சேவையை நாம் சொல்லில் அடக்கிக் கூறல் முடியாது. 'ஈழநாட்'டில் காணப்படும் சிறந்த அம்சம் என்னவென்றுல் அது இன்னும் தன் சுயமரியாதையை இழந்துவிடவில்லை. இனிமேலும் இழக்கப்போவதில்லை என்ற நம்பிக்கை எமக்குண்டு. இன்றைய பத்திரிகைகள் போட்டி மனப்பான்மையுடன் ஒன்றுடன் ஒன்று மோதிச் செய்திகளைத் திரித்துக் கூறிக் காலத்தைக் கழிக்கும்போது 'ஈழநாடு' செய்திகளை உள்ளது உள்ளபடியே கூறி சென்று முன்னேறுவதைப் பார்க்கும்போது நாம் உண்மையாகவே மகிழ்ச்சியடைகிறேம். அதற்காக, எமது உள்ளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேம். ஈழநாடு தமிழ்ப் பேசும் மக்களுக்கு பலவகைகளாலும் சேவைபுரிந்திருக்கிறது. தமிழ் மக்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அவர்களின் உள்ளக்கிடக்கைகளை வெளியிட்டு அவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்தது. இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து முன்னணிக்குக் கொணர்ந்து ஆக்கம் தந்தது. வெளிநாட்டு புதினங்களை அள்ளித்தந்தது. மற்ற நிலையிலிருந்த எழுத்தாளர்களுக்...

வேண்டுமென்று வாசக நேயனுகிய நான் விழைகிறேன். அண்மையில் ஈழநாடு பெருத்துவிட்டது; பல பக்கங்களாக விரிந்துவிட்டது; மலரொன்றையும் தன்னேடு சேர்த்துவிட்டது. அதையிட்டு நாம் மிகமகிழ்ச்சியடைகிறேம். வாசக நேயர்களின் அமோக வரவேற்பினுல் அது மேன்மேலும் வளர்ந்து சிறந்த தொண்டாற்ற முடியும். குறிப்பாக வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கு எழுதும் பணியில் ஊக்கம் தந்து ஆக்கம்தர முயலவேண்டும். வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி ஒரே குறிக்கோளோடு தமது இலட்சியப் பாதையில் செல்லவேண்டும். தமிழ் மக்களின் நியாயமான வேண்டுகோள்களுக்குச் செவிசாய்த்து அவர்களுக்கு ஆக்கம் அளிக்கவேண்டும். இலக்கியம், விஞ்ஞானம், விளையாட்டு, கலை போன்ற அம்சங்கள் 'ஈழநாட்'டில் கட்டாயம் இடம்பெறல் வேண்டும். இளைஞர்களுக்கு 'ஈழநாட்'டுப் பத்திரிகையில் ஒரு பகுதி ஒதுக்கிக்கொடுபடல்வேண்டும். காலம்தோறும் பல போட்டிகள் ஏற்படுத்தி ஈழத்தில் எழுத்தாளர்கள் பலர் உருவாவதற்கு உதவி புரியவேண்டும். 'என்கடன் [illegible] செய்து கிடப்பதே' [illegible]ன்ற குறிக்கோளோடு வெற்றிப் பாதையை நோக்கி [illegible] நடை போட்டுச் செல்லவேண்டும். அதன் வெற்றிக்கு, தமிழ் மக்களி[illegible]யே...

## வடபகுதி அசைஸ்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராசையா, ராஜலட்சுமியுடன் தொடர்பு வைத்திருந்தார். எதிரி இரத்தினம்தான் இந்த தொடர்பை ஏற்படுத்திவைத்தார். இச் சம்பவம் நடக்குமுன் எதிரி என்னுடன் சந்தோஷமாக இருந்தார். என் மச்சானை பாழாக்காதே ராஜலட்சுமியிடம் என்மச்சானை கூட்டிப் போவதால், பணம் எல்லாம் போய்விடும் என்று எதிரியிடம் கூறினேன். நான் அப்படிச் சொன்னபோது இதில் நீ தலையிடாதே என்று எதிரி கூறினுர்.

காங்கேசன்துறை வீதியிலுள்ள பற்றரி கடையை எனக்குத் தெரியும். சம்பவம் நடந்ததினம் மாலை 3 மணிக்கு கடைக்குப் போனேன். இறந்த தெய்வேந்திரன் என் நண்பன். நான்போனபோது மனேஜர் சர்மாவும் அங்கு இருந்தார். தேநீர் குடித்தபின் மாலை 5 மணிபோல் கடைக்கு முன்னுல் உள்ள படியில் நானும் தெய்வேந்திரனும் இருந்தோம். அப்போது சுப்பிரமணியம் அந்த வீதியால் காரில் சென்ருர். சண்முகமும் காரில் இருந்தார் 10 நிமிடம்கழித்து மீண்டும் அதேகார் வந்தது. பின் சீட்டில், எதிரி இரத்தினம் கடைப்பக்கமாக இருந்தார். அவடுக்குப் பக்கத்தில் சண்முகம் இருந்தார். சுப்பிரமணியம் காரை ஓட்டிச் சென்ருர்.

திடீரென வெடிச்சத்தம் கேட்டது எதிரி இரத்தினம் சுட்டார்.

நீதியரசர்:- இரத்தினம் சுட்டதை கண்டீரா? ஆம்.

நீதியரசர்: துவக்குவைத்திருந்ததைகண்டீரா?- ஆம். சுட்டபோது துவக்கு முன் பக்கம் காருக்கு வெளியில் காணப்பட்டது. எதிரிபின் ஆசனத்தில் சாராமல் இருந்தார் நான் உடனே எழும்பினேன். கார் போய் விட்டது.

(விசாரணை தொடர்ந்து நடைபெறும்)

## நவீன மார்க்...

((1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தையும் முதல்வருக்கு வழங்கப்படவேண்டுமென்றும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.

துணைமுதல்வர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இதனை அனுமதித்ததுடன் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

புதிய மத்திய சந்தை அமைப்பதற்கு 6,00,000 ரூபாவை வட்டிக்கு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியிடமிருந்து வாங்குவது என்றும், சேரி ஒழிப்புத் திட்டத்திற்கான கொடைப்பணம் ரூபா 1லட்சத்தையும், அதற்கான இடங்களைத் தெரிவு செய்து, செலவழிப்பதற்கான முழு அதிகாரத்தையும் சபை முதல்வரிடம் கொடுப்பதென்றும். அலுவலகப் பிரயாணத்துக்குப் பாவிக்கும் பொருட்டு மாநகர ஆணையாளர் திரு. அ. த. சுந்தரத்துக்கு ரூபா 10,000 முற்பணமாக வழங்குவது என்றும் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. அல்பிரட் துரையப்பா ஏ. ஜி. இராஜசூரியர் ஆகிய இரு அங்கத்தவர்களும் தவிர மற்றைய சகல அங்கத்தவர்களும் சமுகம் கொடுத்திருந்தனர். பத்திரிகை நிருபர்களும் கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டனர்.

## தமிழரின்...

(1-ம் பக்கத தொடர்ச்சி)

கள் உண்டு. வடஇலங்கையிலும் அப்படித்தான். ஆனுல் கல்விமந்திரி ஒன்றும் தெரியாதவர் போல்அடுத்த தேர்தலுக்கான நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிருர்.

### ஒத்துழைத்து கண்ட பயனில்லை

வடபகுதியில் பௌதீகம் கணிதம் படிப்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. இது பற்றிபல தடவை பிரதமருக்கும், கல்விமந்திரிக்கும் நாம் கூறியும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. ஒத்துழைத்து, ஒத்துழைத்து கடைசியில் கண்டது ஒன்றுமில்லை. இந்த நிலையில் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதிலும் பயனில்லை. பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்றக்குழுக் கூட்டத்திலேயே பலமுறை கோரி வந்தோம். பட்டதாரிகள் குறிப்பிட்ட சில பாடங்களில்தான் தேர்ச்சி பெற்றிருந்தனர். இதனுல்தான் அவர்கள் மாணவ ஆசிரிய பரீட்சைகளில் அதிகமாகச் சித்தியடையவில்லை.

### ஏமாந்ததுதான் மிச்சம்

விரைவில் தமிழர்களின் பிரச்னை சம்பந்தமாக பிரதமரை அடுத்த வாரம் சந்திக்கவிருக்கிறேம். அப்பொழுது நிச்சயம் உங்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறுவோம்.

## ஐயாறன் எழுதுவது

உங்கள் அபிமான பத்திரிகையான 'ஈழநாடு' இன்று பெரிய உருவில் காட்சி அளிக்கிறதல்லவா? இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

சின்ன உருவில் வெளிவந்தது. கையடக்கமாக இருந்தது. அது ஒரு வசதிதான். ஆனுல் தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் அநேகமாக பெரிய அளவில் வெளியாவதுதான் வழக்கமாக இருப்பதாலும் பத்திரிகையில் பலவித அபிவிருத்தி செய்யவும் இது வாய்ப்பளிப்பதாலும், இப்படி அளவை மாற்றத் தீர்மானித்தோம்.

பத்தாவது ஆண்டு நிறைந்து 11 வது வயது பிறக்கும் இன்றைய நல்ல நாளில் சில புதிய மாறுதல்களுடன் ''ஈழநாடு'' வெளிவந்து உங்களுக்கு அதிகமான தொண்டுகளை ஆர்வத்துடன் அழகாகச் செய்ய தன்னைப்பணிவன்புடன் அர்ப்பணித்துக் கொள்கின்றது.

0 0 0

விலையை 10 சதத்திலிருந்து 15 சதமாகக் கூட்டினேமல்லவா? உங்களின் உறுதியான அபிமானத்தை நம்பித்தான் அவ்விதம் செய்யத் துணிந்தோம்.

எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. கொழும்பிலிருந்து போட்டிப் பத்திரிகைகள் பல வருகின்றனவென்ருலும், தமிழ் அன்பர்களாகிய நீங்கள் தொடர்ந்து 'ஈழநாட்'டை ஆதரித்து வருவதற்காக நன்றி.

வாசகநேயர்கள் 'ஈழநாடு'க்கு ஏராளமான பாராட்டு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருக்கின்ருர்கள். இந்த அமோகமான அன்பும் ஆதரவும் எங்களுக்கு அதிக உற்சாகமளித்து, மக்கள் தொண்டை மேலும் ஊக்கத்துடன் செய்யத்தூண்டுகின்றன.

0 0 0

தமிழனுக்கு எங்காவது அநீதி நடந்தால், தமிழ் மொழிக்கு யாரும் சிறுமை செய்தால் உடன் எம் நெஞ்சு துடிக்கிறது. ''உன் கண்ணில் நீர்வடிந்தால்கண்ணம்மா என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி'' என்ற மகாகவி பாரதியாரின் வாக்கு நினைப்பு வருகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் பிரேமதாஸா, மாநகர சபையின் ஆதரவில் நடந்த கூட்டத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கண்ட நீதியுடன் மக்களின் மதிப்பையும் அபிமானத்தையும்பெற்றுவரமுடிவதாயின், அது இறை அருளாலேயே என்பதில் எமக்கு ஐயமில்லை. இதே துணையால் 'ஈழநாடு' எதிர்காலத்திலும் தொடர்ந்து வளர்ந்தோங்கி தொண்டாற்ற முடியுமென்பதும் எமது திட நம்பிக்கையாகும்.

1959-ம் வருடத்தில் இப்பத்திரிகை ஆரம்பமான காலத்திலேஇங்கு தமிழர்இருந்த நிலையுடன் ஒப்பிட்டால், அது இப்போது எவ்வளவோ மேலாக உள்ளதென்பது தெரியும். இன்னும் இங்கு தமிழர் சமூகம் சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து வாழக்கூடியநிலை ஏற்படவில்லைத்தான். என்றாலும், இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட தமிழரே காரணமாக நின்று உதவியுள்ளதாகவும் தமிழரின் ஒத்துழைப்பு இல்லாமல் இங்கு அமைதியோ, முன்னேற்றமோ ஏற்பட முடியாதென்பதையும் ஆட்சியாளர்கள் உணர்ந்து பகிரங்கமாகச் சொல்லி, தமிழரின் குறைகளை அறிந்து நிறைசெய்ய முன்வருவதும் வரவேற்கத்தக்க அறிகுறிகள்.

அன்டைநாடான இந்தியாவுடன் இலங்கையின் உறவு இதே காலத்தில் பெரிதும் மேம்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். இலங்கை-இந்தியர் பிரச்னையைப் பற்றி இருதேச அரசாங்கங்களும்கலந்து பேசி ஒரு சமரச ஒப்பந்தம் செய்து கொள்ளமுடிந்ததால், இங்கு இந்திய துவேஷம் பெரிதும் குறைந்துவிட்டது. அந்த ஒப்பந்தத்தை நல்லெண்ணத்துடன் இருதரப்பினரும் நிறைவேற்றுவதாயின், இந்தச் சிக்கல் தீருவதுடன், இரு

ஒற்றுமையும், சமூக நல்லுறவும் நிலவச்செய்வதே, 'ஈழநாடு' பத்திரிகையின் முயற்சியாகவும் நோக்கமாகவும் இருக்குமென்று பத்தாண்டுகளுக்கு முன் முதல் இதழிலே குறிப்பிட்டிருந்தோம். சென்ற பத்தாண்டுகளில் அந்த மேலான குறிக்கோளுக்காக 'ஈழநாடு' தனது சிறிய குரலை எழுப்பிவந்துள்ளது. இப்போது இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள நிலைமை முன்னிருந்ததை விட அதிக நம்பிக்கை அளிப்பதாக இருப்பதைக் காண்கையில் நாம் மகிழ்ச்சியும் புது நம்பிக்கையும் அடைகிறோம். இன்னும் உலகமெல்லாம் சமாதானமாக ஒரு பெரிய குடும்பம்போல் வாழவும், பரஸ்பர நன்மைக்காக இருந்து முன்னேறவும் செய்யவேண்டிய பணி அதிகமுள்ளது. பலாத்கார சக்திகள் ஒருபுறம் பயமுறுத்தி வருகையில், காந்தியமே உலக நன்மைக்குச் சரியான ஒரேவழி என்பதை உலக மக்கள் இப்போது மெதுவாக உணர்ந்து வருகிறார்கள். அந்த மகான் காட்டிய, சத்தியம், அகிம்சை என்றநெறியை வற்புறுத்தி, நாட்டில் தமிழர் உள்ளிட்ட எல்லா மக்களும் அன்புடன் ஒற்றுமையாக வாழவும், உலக நன்மைகளுக்கு இலங்கை கூடிய உதவிபுரியவும், வேண்டிய பெரிய காரியம் காத்திருக்கின்றது. இப்பெரிய பணிக்கு தன்னைத் தகுதியாக்க 'ஈழநாடு' இறை அருளையும், அன்பர்களின் ஆதரவையும்நாடி தனது பதினோராவது பிராயத்தில் பலத்துடனும் நம்பிக்கையுடனும் அடியெடுத்து வைக்கிறது.

...எவ்வளவு பொறுப்பு உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளைக் கள்ளங்கபடமற்ற அப்பாவி மக்கள் நம்பிவிடுகின்றார்கள். ஆகவே அவர்களை வஞ்சிக்காவண்ணம் பத்திரிகைகள் கண்ணியத்தோடு நடந்துகொள்ள வேண்டும். செய்திகளைப் பிழைபடக் கூறுதலோ அன்றித் திரித்துக் கூறுதலோ பத்திரிகைகளுக்கு அழகல்ல. அவ்வாறான பத்திரிகைகள் நாளடைவில் மக்களிடம் செல்வாக்கிழந்து போகுமென்பதில் ஐயமில்லை. சில பத்திரிகைகள் தோன்றும் பின்பு மின்னல் போன்று சுவடே தெரியாவண்ணம் புகழ் மங்கி அழிந்துவிடும். பத்திரிகைகளில் காணப்படும் செய்திகளை மக்கள் வாசித்து அறிந்து கொள்வதால் செய்திகளைத் திரித்துக் கூறிய பத்திரிகைகளை மக்கள் வெறுக்கவே செய்கிறார்கள்.

மேற்கூறிய குறைகள் இல்லாது ஒரு பத்திரிகை ஈழநாட்டில் இலங்குகின்றதென்றால் அது 'ஈழநாடா'கவே இருக்கும். இன்னார் இனியார் எனப் பாராது சுதந்திரமாகத் தன் பாதையிலே வீறு நடை போட்டு பத்திரிகை உலகிலே தனக்கென ஒரு சிறந்த இடத்தைப் பிடித்துவிட்டது 'ஈழநாடு'. 'ஈழநாடு' இதுவரை காலமும் அரும்பெரும் சேவை செய்திருக்கிறது என்று கூறுதல் பொருத்தமே. இதுவரை காலமும் பல சமயம் பலரது பாராட்டுக்களையும் புகழ்மாலைகளையும் பெற்று இந்த ஆண்டு மாசித்திங்கள் தனது பத்தா

...செய்தது. இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்து முன்னணிக்குக் கொணர்ந்து ஆக்கம் தந்தது. வெளிநாட்டுப் புதினங்களை அள்ளி அள்ளித்தந்தது. மறை நிலையிலிருந்த எழுத்தாளர்களுக்கும் புத்துணர்ச்சியளித்து வெளிக்காட்டிற்று. விடயங்களை உள்ளபடியே கூறி நாட்டின் உண்மை நிலையை எடுத்துக்காட்டிற்று. சுருங்கக்கூறின் வேண்டியவர் வேண்டாதவர் எனப் பாரபட்சம் காட்டாமல் பயமின்றி யாவர்க்கும் செவிகொடுத்து தன் இலட்சியப் பாதையில் சென்று தனிப்பெருமை பெற்றதெனலாம். 'ஈழநாடு' இதுவரை காலமும் செய்த சேவையைப் பற்றி எங்ஙனம் எடுத்துரைத்தல் முடியும். ஆனாலும் இன்னும் பல படிகள் முன்னேறி அது உச்சநிலையை அடைய

...டும். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளோடு வெற்றிப் பாதையை நோக்கி வீறுநடை போட்டுச் செல்ல வேண்டும். அதன் வெற்றிக்கு, தமிழ் மக்களிடையே புகழ்பரப்பி வாழ்வதற்கு வாசகனாகிய எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

செ. தருமராசா
கீழைப் புலோலி,
பருத்தித்துறை.

## கோரிக்கை

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம் நாவலர் சிலை திறப்புவிழாவை சமய அடிப்படை நிறைந்த தமிழ் விழாவாகக் கொண்டாட வேண்டுமென்ற தனது கோரிக்கையை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்கு தெரிவித்துள்ளது.

# நேயர்களுக்கு

ஈழநாடு பத்திரிகை இன்று பதினோராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.


குழந்தைப்பருவத்திலிருந்து சிறுபிராயத்துக்கு மாறுகிறது. இன்றைய 'ஈழநாடு' பத்திரிகையைப் பார்த்ததுமே வாசகநேயர்கள் 'ஈழநாடு' வளர்ந்துள்ளதை உணர்வர்.

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவை இன்றே மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு உத்தேசித்திருந்தோம். இவ்விழாவையொட்டி இலங்கையில், இதுவரை எந்தப் பத்திரிகையும் வேறு எந்தத் தாபனமும் நடத்தாத மாபெரும் இலக்கியப் போட்டியொன்றையும் நடத்தியிருக்கிறோம். நாவல், காவியம், சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம், மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளையும் நடத்தியுள்ளோம். எழுத்தாளர்களும் கவிஞர்களும் பேரார்வத்துடன் இப்போட்டிகளிற் கலந்து கொண்டுள்ளனர். இன்றே விழாவை நடத்தி அந்த விழாவிலேயே இப்போட்டிகளில்வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளை வழங்குவதெனவும் திட்டமிட்டிருந்தோம். இத்துடன் அறிஞர் பெருமக்களின் கருத்துக்களையும் பல நல்ல பயனுள்ள கட்டுரைகளையும் பெரியார்களின் ஆசியுரைகளையும் கொண்ட வண்ண முகப்புடன் கூடிய மலர் ஒன்றையும் வெளியிடுவதற்கு ஒழுங்கு செய்திருந்தோம். எதிர்பாராத சில வசதிக் குறைவுகளாற் பத்தாண்டு நிறைவு விழாவையும் பரிசளிப்பு விழாவையும் சிறிது ஒத்திவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அன்று அதிக பக்கங்களுடன் 'ஈழநாடு' பத்தாண்டு மலர் உங்கள் கைகளில் மலரும். பரிசுபெறும் இலக்கிய கர்த்தாக்கள் யார்யார் என்பதையும் அந்த மலரிலேயே நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

...திரு. அல்பிரட் துரையப்பா ஏ. ஜி. இராஜசூரியர் ஆகிய இரு அங்கத்தவர்களும் தவிர மற்றைய சகல அங்கத்தவர்களும் சமுகம் கொடுத்திருந்தனர். பத்திரிகை நிருபர்களும் கூட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். (கா. நி)

...மிச்சம்

விரைவில் தமிழர்களின் பிரச்னை சம்பந்தமாக பிரதமரை அடுத்த வாரம் சந்திக்கவிருக்கிறோம். அப்பொழுது நிச்சயம் உங்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறுவோம்.



**வண்ணை பிரமஸ்ரீ தி. இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்களின்** சஷ்டியப்த பூர்த்தியென்ற 60-ம் ஆண்டு நிறைவு (வைர) விழா வேதாகம முறைப்படி சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் குருக்களவர்கள் 60 வித தானங்களையும் முறையே செய்தார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக 'ஈழநாடு' கட்டிடத்துக்கு அத்திபாரக்கல் நாட்டப்படுகையில் இவரே விநாயகபூசைசெய்து ஆசீர்வதித்தார்கள்.

## தசாகம்

காலஞ்சென்ற எமது தந்தையார் மயிலணி பிரம்மஸ்ரீ ச. சோமசுந்தரஐயர் அவர்களின் தசாகப் 12-2-69 புதன்கிழமை பகல் 12 மணிக்கும் சபிண்டிகரணம் 14-2-69 வெள்ளியளிறும் சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். சுற்றமித்திரர்களை கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். சோ. இரத்தினசபாபதிக் குருக்கள் (கோப்பாய்) கோ. சோமாஸ்கந்தக் குருக்கள் (மயிலணி) 668

## பல இடங்களில் அஞ்சலி

கோப்பாய், திங்கள்

அறிஞர் அண்ணாவின் அனுதாபக் கூட்டங்கள் இக்கிராமத்தின் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. கறுப்புக் கொடிகள் இன்னும் பறந்தவண்ணமாகவே உள்ளன. கோப்பாய் நாவலடி சனசமூகநிலையம் அனுதாபச் செய்தியொன்றை அறிஞர் அண்ணாவின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைத்துள்ளது.

...ணம்மா என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி'' என்ற மகாகவி பாரதியாரின் வாக்கு நினைப்பு வருகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் பிரேமதாஸா, மாநகர சபையின் ஆதரவில் நடந்த கூட்டத்தில் தமிழில் ஒரு சொல்லும் கூறுமல் இருந்ததைப் பற்றி ஏமாற்றம்தெரிவித்து எழுதினேனல்லவா? அவர் அதைக் கேள்விப்பட்டுவிட்டு, அதை பற்றி சில கூட்டங்களில் ஏதோசமாதானம் சொன்னாராம். என் எழுத்தைப் பொருட்படுத்தி அதற்குப் பதில் சொல்ல முற்பட்டதற்காக அவருக்கு நன்றி. பின்னர் அவரே வேறு ஒரு கூட்டத்தில் தமிழிலேயே பேசியுள்ளதை அறிந்ததும் எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. இதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

இப் பத்தியில் அப்படி எழுதியிராவிட்டால், அவர் இங்குள்ள பொது மக்களின் உணர்ச்சியை அறியவோ பின்னர் தமிழில் பேசவோ செய்திருப்பாரா? பொது மக்களின் கருத்தை விருப்பு வெறுப்பின்றி, துணிச்சலுடன் வெளியிடுவது பத்திரிகைகளின் கடமைகளில் முக்கியமானதாகும். அமைச்சர் தமிழில்பேசி இங்குதமிழ் மக்களின்புண்பட்டுள்ள மனதை சற்றேஆற்றி, அவர்களது அபிமானத்தைப் பெற முடிந்தது நல்ல முன்மாதிரியாகும். மற்ற அமைச்சர்களும் இங்கு வருகையில் இந்த முன்மாதிரியைப் பின்பற்றுவார்களா?

0 0 0

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை, பின்னும் என் பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம் தவிரப்பணிப்பானை, இன்னதன்மையன் என்றறிவொண்ணு எம்மானை எளிவந்த பிரானை, அன்னம் வைகும் வயற் பழனத்தணி ஆரூரானை மறக்கலுமாமே.

-ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## ஓய்வு பெற்றார்

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாய் தெற்கு மகாவித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. க. கந்தவனம் தனது பலவருடகால ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு வித்தியாலய ஆசிரிய மாணவர்களால் பிரிவுபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு. சி. தர்மலிங்கம் இப்பிரிவுபசார விழாவிற்குத் தலைமை வகித்தார்.

ஆசிரியருக்குக் கடிதம்

# சிங்களத் தகுதியின்மையைத் தளர்த்துக

4-2-69 செவ்வாய்க்கிழமைவெளிவந்த 'ஈழநாடு' இதழில் பிரதம தாதி ஒருவரும், டாக்டர் ஒருவரும் சிங்களத் தகுதியில்லாமையால் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை அறிந்துமனம் வருந்தினேன்.

டாக்டர் சோமசுந்தர பாரதி(B.D.S) மிகத்திறமைசாலி. கருணையுடையவர். எனக்கு வந்த கொடிய பல்நோயை நுட்பமான முறையில் வைத்தியஞ்செய்து ஒரு சுமுமையில்மாற்றிவிட்டார். யாருடனும் ஆதரவும் அன்பும் உடையவர். சுலபமான முறையிலே காலம் நீடிக்காமல் வைத்தியஞ்செய்துசுகப்படுத்தும் திறமையும் வைத்திய அறிவும் விவேகமும் உடையவர்.

அவரை அரசாங்கம் பயன்படுத்திப் பொது மக்களுக்கு நல்ல சேவை செய்விக்கவிரும்பினால், சிங்களத்தில் தேர்ச்சி பெறும்கால எல்லையை நீடித்தல் வேண்டும். இவருக்கும் இவரைப் போன்றவர்களுக்கும் காலநீடிப்பை உண்டாக்க அரசாங்கம் வாய்ப்பளிக்கவேண்டும்.

த சுப்பிரமணியம்.
அராலி,
வட்டுக்கோட்டை.

# வாழிய பெரிதே!

ஆசிரியப்பா

ஈழமா நாடுமுன் இயற்றிய நல்வினை
வாழவந் துதவிய வண்மைய தென்னக்
காழகம் போற்கடல் சூழுமித் தீவினில்
தமிழினம் வாழத் தமிழ்மர போங்கத்
தமிழ்நலஞ் சிறக்கத் தமிழ்மக ளின்புறத்
தோன்றிய ஈழ நாடெனுந் தொண்டனும்
ஒளிகான் றிலங்கும் உத்தம! நீயும்
களிபே ருவகையிற் கவின்பெறும் ஆண்டு
பத்தும் நிறைவுறப் படைத்தனை யென்னும்
சித்த மகிழ்ச்சிக் குரிய செய்தியை
அறிந்தே பெரிதும் அகமிக மகிழ்ந்தனம்;
இறைவன் திருவருள் நிறைவுற எய்திக்
குறைவிலாப் போதனை கொள்கைகள் பெருக்கி
பதினொராம் ஆண்டிற் பற்பல நன்மைகள்
கதிபெறப் பெற்றுக் கனதனம் உற்று
வாழிய பெரிதே வாழிய பெரிதே
ஆழிசூ ழுலகில் அருந்தமிழ் வளர்த்து
வாழிய பெரிதே வாழிய பெரிதே.

தி. இரத்தினசபாபதிக் குருக்கள்


## ஏல விற்பனை

**யாழ்ப்பாணத்தில் 20 அடி றேட் வழியுடன்**
**20 கட்டடக் காணித் துண்டுகள்**

மார்க்கட், ஆஸ்பத்திரி, கல்லூரிகள் ஆகியவற்றிற்கு 1/2 அல்லது 3/4 மைல் கிட்டியதாக 43 பரப்பு காணி திருநெல்வேலி குளத்துக்கருகாமையில் பொது ஏல விற்பனை செய்யப்படும். 1 1/2—2 பரப்புகளாகவும் விற்பனை செய்யப்படும், விற்பனை திகதியை எதிர்பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் பிரதிநிதி:
**சி. கனகரத்தினம்** 3-ம் மைல். கொக்குவில்.
அவ்லோன் றேட்ஸ்
றியல் எஸ்டேட் ஏஜெண்ட்ஸ், குருநாகல்.
1167 போன்: 6179



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 11-ம்திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org